வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 08.05.2024 புதன்கிழமை | இதழ் : 129 | பக்கங்கள் : 12





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# பழைய நிலைக்கு செல்ல நேரிடும்!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை



கொழும்பு, மே. 08

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார கொள்கை மாற்றமடைந்தால் மீண்டும் பழைய நிலைமை ஏற்படலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இது தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

நீடித்த ஸ்திரநிலை என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த ஊடக சந்திப்பில் புதிய மத்திய வங்கி சட்டத்திற்கு அமைய, மத்திய வங்கி அறிவித்துள்ள முதலாவது பொருளாதார விபரிப்பு தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக மீண்டும் வழமைக்கு திரும்புவதாக மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

நாணய நிதியத் திட்டத்துடன் இணக்கம் காணப்பட்ட இலக்குகள் என்பது அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட செயற்றிட்டம் என சுட்டிக்காட்டிய ஆளுநர், அரசாங்கம் இணங்கியுள்ள குறித்த செயற்றிட்டத்தை தற்போதைய முறையில் தொடர்ந்தால் நிலையாக பேண முடியும் என தாம் அறிவித் துள்ளதாகவும் கூறினார். 11

விசா வழங்குவதில் சர்ச்சை:

## மோடியின் நெருங்கிய நண்பரின் நிறுவனத்துடன் அரசு ஒப்பந்தம்?

கொழும்பு, மே. 08

இலங்கை சட்டத்தின் பிரகாரம் விசா வழங்குவதற்கு முழுமையான அதிகாரம் குடிவரவுத் திணைக்களத்திற்கே உள்ள நிலையில், "ரணில் - ராஜபக்ச" அரசாங்கம் ஒன்லைன் விஸா வழங்குவதற்கான அனுமதியை இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் நெருங்கிய நண்பரான சுபின் கர்கரியாவுக்கு சொந்தமான வி.எவ்.எஸ் குளோபல் 11

## சுகாதாரத் தொழிற்சங்கங்கள் நாளை முதல் போராட்டத்தில்!

கொழும்பு, மே. 08

எதிர்வரும் மே மாதம் 09 ஆம் திகதி முதல் மீண்டும் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு சுகாதார தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

பொருளாதார நீதியை நிறைவேற்றாதது தொடர்பாக, 72 சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு 4 மாதங்களுக்கு முன்னர் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது. 11

## மன்னார், பூநகரி காற்றாலையின் மின்சார கொள்வனவுக்கு அனுமதி

கொழும்பு, மே 08

இந்தியாவின் அதானி நிறுவனத்தின் பூநகரி, மன்னார் காற்றாலை மின் நிலையங்கள் மூலம் 484 மெகாவாற்ஸ் மின்சாரத்தை 20 வருடங்களுக்கு கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பில் அதானி கிறீன் எனர்ஜி லிமிற்றட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்யப்படவுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி, உற்பத்தி செய்யப்படும் மின் அலகு ஒன்று (கிலோ வாட்ஸ்) 8.26 டொலரை இறுதிக் கட்டணமாக அங்கீகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 11

## உள்ளக பொறிமுறையின் மூலம் எமது மக்களுக்கு நீதி கிடைக்காது

### கூறுகிறார் சுமந்திரன் எம். பி.

கொழும்பு, மே 08

உள்ளகப் பொறிமுறை ஊடாக எமது மக்களின் பிரச்னைகளுக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் நீதி கிடைக்காது. இதற்கு கடந்த 15 வருட காலமே சான்றாக அமைகிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க் கிழமை பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பல ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்ட நிலையில் தற்போது இன்னோர் ஆணைக்குழுவை அமைப்பது செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத் தொடருக்கான கண் துடைப்பு நாடகமாகும்.

உலகத்தில் இடம் பெறுகின்ற எந்த வொரு போரும் சுத்தமான யுத்தம் 11

## விஜயதாஸவின் மனு நிராகரிப்பு

கொழும்பு, மே 08

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணையின்றி நிராகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக செயல்படுவதைத் தடுத்து கொழும்பு 11

## கிளிநொச்சி மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலை!

### 732பேர் பாதிப்பு

கிளிநொச்சி, மே. 08

கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் வெப்பநிலையுடன் கூடிய வறட்சி காரணமாக பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 239குடும்பங்களைச்சேர்ந்த 732பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் நல்லூர், செட்டி யார்குறிச்சி, ஆலங்கேணி,ஞானிமடம், கொல்லக்குறிச்சி, மட்டுவில் நாடு கிழக்கு, 11



## ஒட்டகப்புலத்தில் பொது மக்கள் வீதிகளை பயன்படுத்த அனுமதி

யாழ்ப்பாணம், மே 08

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை ஒட்டகப்புலத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதை அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டது.

வலி. வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒட்டகப்புலத்தில் 234. 8 ஏக்கர் காணிக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகளை திறக்குமாறும், இணைந்த வீதிகளைப் பயன்படுத்த அனுமதிக்குமாறும் 11

## பொலிஸ் இராஜ்ஜியத்துக்கு இலங்கையில் இடமில்லை!

### சபையில் சாடிய சஜித்

கொழும்பு, மே 08

அநீதிகளுக்கு எதிராக கருத்துத் தெரிவித்தமைக்காக விசாரணைக்கு அழைப்பதற்கு இலங்கையில் நடப்பது பொலிஸ் இராஜ்ஜியமல்ல. இலங்கை ஜனநாயக நாடு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன் வைத்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், 11

## முன்னாள் போராளி அரவிந்தன் வெலிக்கடையில் உணவுதவிர்ப்பு



கொழும்பு, மே. 08

முன்னாள் போராளியும், போராளிகள் நலன்புரி சங்க தலைவருமான செ.அரவிந்தன் இரு நாட்களாக வெலிக்கடை சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகிறார் என தெரியவருகின்றது. 11

## நாடு முழுவதும் விவசாய நவீனமயமாக்கல் திட்டம்

### ஒரு குடும்பத்துக்கு 6000 டொலர்கள் முதலீடு

கொழும்பு, மே 08

இலங்கையில் விவசாய மற்றும் வனப் பாதுகாப்புத் திட்டமொன்றில் இணைந்து செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் காலநிலை மாற்ற செயலகம் 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

தெற்கில் நடத்தப்படும் கருத்துக்கணிப்புகள் பற்றி நேற்று முன்தினமும் இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம்.

தினமும் அரச தரப்பில் நடந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு விடயங்களும் அரசின் மீதான மக்களின் நம்பிக்கையை அதிகரிக்க உதவி வருவதாகக் கொழும்பில் சந்தித்த முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக அரசின் சொல்வாக்கு எப்படி இருக்கின்றது என்பது பற்றி வாரந்தோறும் கருத்தறியுமாறும் அவ்வாறு கருத்தை அறியும்போது அதில் ஏற்படும் மாற்றங்கள் எதனால் நடக்கின்றது என்பது பற்றியும் அறிந்துகொள்ளுமாறும் அரச தரப்பில் உத்தரவிடப்பட்டிருக்கின்றதாம். அரச புலனாய்வாளர்கள் நாடு முழுவதும் வாராவாரம் மக்கள் கருத்துகளை அறிந்து ஜனாதிபதிக்கு அறிக்கையிட்டு வருகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை அதிகரித்து வருவதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கின்றதாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் பேரில் அரச நிறுவனங்களை நட்டத்தில் இயங்காமல் தடுப்பதற்காக பல நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருந்தது.

உதாரணமாக நட்டத்தில் இயங்கிய இலங்கை மின்சார சபை இப்போது பல ஆயிரம் கோடி ரூபாய்களை கடந்த வருடத்தில் இலாபமீட்டியிருக்கின்றது. இதனால், இனி மின்சார கட்டணங்களை குறைக்கக் கூடிய அளவுக்கு மின்சார சபை "நிமிர்ந்து" நிற்கிறது. விரைவில் இருபது வீதத்துக்கும் அதிகமான அளவில் விலையைக் குறைக்க திட்டமிடப்பட்டு வருகின்றது.

மின்சார கட்டணத்தை எழுபது வீதம், அறுபது வீதம் என்று அதிகரித்தபோது மக்கள் பாதிக்கப்பட்டனர். எந்த விலையேற்றத்தையும் ஒரே தடவையில் இவ்வாறு அதிகரிக்கின்றபோது அது மக்களுக்கு பாதிப்பையே ஏற்படுத்தும். ஆனால், ஒரு சில மாதங்களில் அதுவே, மக்களுக்கு பழக்கப்பட்டுவிடும். அதாவது, மக்கள் அதற்கு பழக்கப்பட்டு விடுவார்கள். ஆனால், அதன்பின்னர் இருபது வீதத்தை அதாவது தற்போது இருக்கின்ற விலையில் (அதிகரித்த விலையில்) இருபது வீதத்தை குறைக்கின்றபோது அது பாவனையாளர்களை மகிழ்விக்கும் - குதூகலப்படுத்தும் என்று சொல்லலாம்.

சில பிரபல வர்த்தக நிறுவனங்களில், தமது பொருட்களின் விலையை குறைத்து மலிவு விற்பனை என்று அறிவித்து - பெரும் எடுப்பில் அதனை விளம்பரப்படுத்தி - வியாபாரம் பண்ணுவதுபோல, ஒரு பொருளின் உண்மையான விலை ஐநூறு ரூபாய் என்றால், அதன் விலையை எழுநூறு ரூபாய் என்றும் இப்போது இருநூறு ரூபாய் கழித்து ஐநூறு ரூபாய்க்கு விற்பதாகவும் விளம்பரப்படுத்துகின்றபோது மக்கள் அதனை வாங்கிச் செல்வதுபோல.

இப்போது மின்சார கட்டணம் இருபது வீதம் குறைக்கப்படவிருக்கின்றது. மின்சார கட்டணம் குறைந்தால் அதனால் உற்பத்தி செலவு குறைய பொருட்களின் விலையும் குறையலாம். இவ்வாறு ஒவ்வொரு நன்மைகளும் மக்களுக்கு கிடைக்கின்றபோது அரசின்மீதான மக்கள் செல்வாக்கு அதிகரிக்கவே செய்யும்.

இதுபற்றிய தகவல்களை சொல்லிக் கொண்டிருந்த முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவர், "ஜனாதிபதி தனக்கான ஆதரவு எப்படி இருக்கின்றது என்பது குறித்து அறிந்து கொண்டிருந்தாலும் தான் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கை முழுமையாக வந்ததால் மாத்திரமே தேர்தலைக்கூட நடத்துவார். தனக்கு சாதகமில்லை என்றால் முதலில் அவர் பாராளுமன்றத்தைக் கலைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்றார்.

ஜனாதிபதி ரணில் என்னதான் கெட்டித்தனமாக அரசாங்கத்தை நடத்தி சென்றாலும் அவரோடு இருக்கின்றவர்கள் எப்போது வேண்டுமானாலும் எல்லாவற்றையும் போட்டு உடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லையே என்றார் ஒரு முக்கிய நபர். சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ சுற்றுலாவிகளை நாட்டுக்குள் கொண்டுவர இரவு - பகலாக உழைத்துக் கொண்டிருக்க, விமான நிலையத்தில் வீசா வழங்கும் பணியை ஓர் இந்திய நிறுவனத்துக்குக் கொடுத்து வேறு ஓர் அமைச்சர் பண்ணிய கைங்கரியம் கடைசியில் எப்படி ஆகியது என்பதை கண்டீர்கள்தானே? அதுபோல, இவர்கள் யார் எதனை எப்போது செய்வார்களோ என்ற பதற்றத்துடனேயே ஜனாதிபதி ரணில் ஒவ்வொரு நாட்களையும் கடத்த வேண்டியிருக்கிறது என்றார் அவர்.

**- ஊர்க்குருவி.**

# பேச்சுரிமைக்கு தடையேற்படின் பெரும் விளைவுகள் ஏற்படும்!

## அரசை எச்சரித்த விஜித ஹேரத்



கொழும்பு, மே 08

வீசா விநியோகத்தில் இடம் பெறவிருந்த பெரும் மோசடியை இளைஞன் ஒருவர் பகிரங்கப் படுத்தியுள்ளார். இந்த விடயத்தில் தவறுகளை அரசாங்கம் திருத்திக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து அந்த இளைஞனுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தினால் அரசாங்கம் மீண்டும் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். சட்டத்தரணிகளும், நாட்டு மக்களும் ஒன்றிணைவார்கள் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வங்கிகளால் வழங்கப் பட்ட கடன்கள் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் (பராட்டே) என்பன மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தேசிய பொருளாதாரத்தில் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் 52 சதவீதமளவில் பங்களிப்பு செய்கிறார்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தொழில் முயற்சியாளர்கள் பொறுப்புக்கூற வேண்டிய தேவை கிடையாது. ஆனால், அவர்கள் மீதே பொருளாதார நெருக்கடி சுமத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினாலும், ஊழல் மோசடியாலும் நாடு வங்குரோத்து நிலையடைந்தது.

கோவிட் பெருந்தொற்றினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால், கோவிட் தொற்றினால் எமது அண்மை நாடுகளான மாலைதீவு, பங்களாதேஷ் மற்றும் பூட்டான் உள்ளிட்ட நாடுகள் வங்குரோத்து நிலையடையவில்லை. பொருளாதார மீட்சிக்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அரசாங்கம் பேச்சளவில் குறிப்பிடுகிறது. ஆனால், செயலளவில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் சட்டமூலம் தற்காலிகமானதே, 7 மாதங்களை வரையறுத்தே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஏழு மாத காலத்துக்குள் நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையுமா? என்பதை குறிப்பிட முடியாது, ஆகவே, தொழில் முயற்சியாளர்களுக்கு 2 ஆண்டுகளேனும் நிவாரணம் வழங்க வேண்டும்- என்றார்.

# மேலும் இரு புலமைப்பரிசில் திட்டங்களை நேற்று ஆரம்பித்தது ஜனாதிபதி நிதியம்

கொழும்பு, மே 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய தற்போது வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாக மேலும் இரண்டு புலமைப்பரிசில் திட்டங்களை ஜனாதிபதி நிதியம் ஆரம்பித்துள்ளது.

இதன்படி பிரிவெனா மற்றும் பெண் பிக்குணி கற்றை நிறுவகங்களில் கற்கும் பிக்கு மற்றும் பிக்குணிகளுக்கும் ஏனைய மாணவர்களுக்கும், க. பொ. த. உயர்தரத்தில் தகவல் தொழில்நுட்பம் கற்கும் மாணவர்களுக்குமான புதிய புலமைப் பரிசில் வேலைத்திட்டம் இம்மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் பெண் பிக்குணி கற்றை நிறுவங்களுக்கும்,ஏனைய மாணவர்களுக்கான 822 கற்கை நிறுவனங்கள் இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருப்பதோடு, இதற்காக மேற்படி கற்கை நிறுவனமொன்றுக்கு 06 புலமைப் பரிசில்கள் என்ற அடிப்படையில் நிறுவனத் தலைவர்களின் பரிந்துரைக்கமைய பயனாளிகள் தெரிவு செய்யப்படுவர்.

இரண்டு கட்டங்களாக வழங்கப்படும் இந்த புலமைப்பரிசில் பிரிவெனாக்களில் கற்கும் 5000 வறிய மாணவர்களுக்கு வழங்கப் படவுள்ளதோடு, முதல் கட்டத்தின் கீழ் 2024 மே மாதம் தொடக்கம் 12 மாதங்களுக்கு 3000 ரூபாயும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 24 மாதங்களுக்கு 6,000 ரூபாயும் வழங்கப்படவுள்ளது.

அதேபோல் இந்த விண்ணப்பம் மற்றும் அறிவுறுத்தல்களை 2024 - 05-10 அரச வர்த்தமானியில் பிரசுரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்தரத்துக்கு தெரிவாகி தகவல் தொழில்நுட்ப பாடங்களை கற்கும் மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய, இலங்கை தொலைத் தொடர் பாடல்கள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்பின் கீழ் ஜனாதிபதி நிதியத்தினால் இந்த புலைமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

அனைத்து கல்வி வலயங்களிலும் முன்னெடுக்கப்படவிருக்கும் இந்த புலமைப்பரிசில் வேலைத் திட்டத்தின் கீழ் வலயமொன்றில் குறைந்தபட்சமாக 50 மாணவர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தெரிவு செய்யப்படும் 2024 ஆம் ஆண்டு க. பொ. த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு 24 மாதங்களுக்கு 6,000 ரூபாய் வழங்கப்படும்.

கல்விச் செயல்பாடுகளை முன்னெடுப்பதில் பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்ளும் 2022/ 2023 க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து உயர் தரத்துக்கு தெரிவான மாணவர்களுக்கு நாடளாவிய ரீதியில் 100 கல்வி வலயங்களுக்கு 60 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு உயர் தர பரீட்சைக்குத் தோற்றும் வரையில் 6000 ரூபாய் வழங்கப்படவுள்ளது. (எ)

# வீசா கட்டண அதிகரிப்பு சட்டவிரோதமானது

## அமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சி போர்க்கொடி

கொழும்பு, மே 08

வீசா கட்டணம் அதிகரிக்க பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டபோதும் வீ. எப். எஸ். சேவைக் கட்டணத்துக்கு பாராளுமன்றத்தின் அனுமதி இல்லை. சட்டவிரோதமான முறையிலேயே வீ. எப். எஸ். கட்டண அதிகரிப்பு பிரேரணை நுழைக்கப்பட்டுள்ளது. எனவே, பாராளுமன்றம் பிழையாக வழிநடத்தப்பட்டிருப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நேற்றுப் பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வெளிநாடுகளிலிருந்து வரும் ஒருவரிடமிருந்து அறவிடப்படும் வீசா கட்டணத்தை அதிகரிக்க பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டது. ஆனால், வீ. எப். எஸ். என மேலதிகமாக 20. 21 டொலர் அறவிடப்படுகிறது. இதற்கு பாராளுமன்றத்தில் அனுமதி பெறப்படவில்லை. அவ்வாறு அதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெற வேண்டும் என்றால் அதனை தனியாக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்க வேண்டும்.

ஆனால், வீசா கட்டண அதிகரிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையுடன் சட்டவிரோதமான முறையில் இணைத்து இதனை அனுமதித்துக்கொண்டுள்ளது. அதனால் பாராளுமன்றத்தை பிழையாக வழிநடத்தியமைக்காக நிலையியற் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேநேரம் சேவைக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானித்து அனுமதிக்கப்பட்டதாகவும் அதனால் அதனை பாராளுமன்றத்தில் அனுமதிக்கத் தேவையில்லை எனவும் அமைச்சர் தெரிவிப்பது பிழையான விடயமாகும். நிதி தொடர்பான அதிகாரம் இருப்பது பாராளுமன்றத்துக்கே. அதனால் இந்த சேவைக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

மேலும் ஒரு சுற்றுலா பயணியிடமிருந்து வீ. எப். எஸ் கட்டணமாக 18. 50 டொலர் அறவிடுகிறது. இந்த பணம் அரசாங்கத்துக்கு கிடைப்பதில்லை. இதன் பிரகாரம் 40 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெறுகிறது. அதனால் அரசாங்கம் இவ்வாறானதொரு திர்மானம் எடுத்திருப்பது எதிர்வரும் தேர்தல் வேலைத்திட்டத்துக்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்துவதற்காகவா என்ற சந்தேகம் எழுகிறது.- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
08.05.2024 புதன்கிழமை
குரோதி வருடம், சித்திரை 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# களமும் புலமும் ஒரே மாதிரியாய்

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பதினைந்தாவது நினைவு கூரல் அண்மித்து வருகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் கடந்த பதினைந்து வருட காலத்தை திரும்பிப் பார்த்தால் அனைத்திலும், வெறுமையே மேலோங்கி யிருக்கின்றது. தமிழ் தேசியத்தை முன்னிலைப்படுத்துவதாக கூறிக்கொள் ளும் கட்சிகளால் ஒன்றுபட்டு, கருத்தொருமித்து, ஒரு அரசியல் நிலைப்பாட்டுக்காக ஒன்றுபட்டுச் செயல்பட முடியவில்லை. தாயக அரசியல் நிலைமையை ஒரு வரியில் கூறுவதனால், தமிழ்த் தேசிய கட்சிகள் என்றாவது ஒன்றுபட்டுச் செயலாற்றுமா? இந்தக் கேள்வியுடன் நாட்கள் நகர்கின்றன.

புலத்தை திரும்பிப் பார்த்தால் அங்கும் இதே நிலைமைதான். கனேடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பை கைப்பற்றும் அணியொன்று உருவாகியிருக் கின்றது. அதே வேளை, நாடு கடந்த அரசாங்கத்துக்குள் பதவி மோதல்கள் பேசு பொருளாகியிருக்கின்றன. கடந்த பதினைந்து வருடத்துக்கு பின் னரும் கூட, புலம்பெயர் சூழலில் பதவிக்காக அடிபடுகின்றனர் என்றால் - இந்த சமூகம் உருப்படுவதற்கான வழியிருக்கின்றது என்று எவ்வாறு நம்புவது?

ஜனாதிபதித் தேர்தலில், ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண் டும் என்று எண்ணுகின்ற போது, அது சாத்தியமா என்னும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இதற்குப் பின்னால் யார் இருக்கின்றனர் என்று கேள்வி கேட்கப்படுகின்றது? அவ்வாறாயின் கடந்த பதினைந்து வருட காலமாக முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் அனைத்துக்கும் பின்னால் யார் இருந்தனர்? அவைகள் எல்லாவற்றுக்கும் பின்னால் தூய நோக்கங்கள் இருந்திருக்கின்றது என்பதற்கு என்ன ஆதாரம்?

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்றால் - அதனை நிரூபிப்பதற்கான முயற்சிகளை கண்டு ஏன் அஞ்ச வேண்டும்? அந்த அச்சத்தின் பின்னணி என்ன? அவ்வாறாயின் தமிழ் மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை என்பதா எதிர்ப்பவர்களின் நிலைப்பாடு?

கடந்த பதினைந்து வருடகால அரசியல் முன்னெடுப்புக்கள் எவற்றா லும் எந்தவொரு நன்மையும் தமிழ் மக்களை சேரவில்லை - ஒரு வேளை சில விரல்விட்டு எண்ணக் கூடிய தமிழ் அரசியல்வாதிகள் நன்மைகளை பெற்றிருக்கலாம். இந்தப் பின்புலத்தில் தோல்வியடைந்த முயற்சிகளை முன்னெடுப்பதில் என்ன பொருளுண்டு? தோல்வியடைந்த வழிமுறை களிலேயே தமிழ் மக்கள் காலத்தை செலவிட வேண்டும் என்பவர்களின் உண்மையான நோக்கம் என்ன?

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்னுமடிப்படையில் சிறீ லங்காவின் ஆட்சியாளர் சிந்திக்கவில்லை - அதிலும் தமிழர் தாயத்தின் அரசியல் பிரச்சனையை - வெறுமனே, வடக்கு பிரச்சனையாகவே சிங்கள ஆட்சி யாளர்கள் நோக்குகின்றனர் - அவ்வாறுதான் பேசுகின்றனர். தமிழ் மக் கள் கிழக்கிலங்கையில் இருப்பதான ஒரு கருத்துக் கூட அவர்களிடமிருந்து வருவதில்லை. இவ்வாறானதொரு நிலையில் தமிழ் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும், ஒரேமாதிரியான அரசியல் உணர்வு நிலையிலும், புரிதலிலும் தான் இருக்கின்றனர் என்பதை எந்த அடிப்படையில் நிரூபிப்பது?

இவ்வாறானதொரு பின்புலத்தில் களத்தில் இயங்கும் தமிழ்த் தேசிய சக்திகளும் புலத்தில் இயங்கும் அரசியல் தரப்புக்களும் ஒரே கோட்டில் பயணித்திருக்கவேண்டும் - ஆனால் இப்போதும் அவர்கள் ஒரே நேர் கோட்டில்தான் பயணிக்கின்றனர் - அதாவது, தங்களுக்குள் பிளவுற்று மோதிக் கொள்வது, தங்களை தாங்களே தாழ்த்திக் கொள்வது, தாங்கள் மட்டும்தான் சரியானவர்களென்று அடம்பிடிப்பது, யதார்த்தங்களை புரிந்து கொள்ள மறுப்பது - இவை அனைத்திலும் களமும் புலமும் ஒரே மாதிரி யாகவே இருக்கின்றது. யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்களுக்குப் பின்னரும் கூட, இவ்வாறானதொரு நிலைமை இருக்கின்றதென்றால், தமிழினம் உருப்பட வழியிருக்கப் போவதில்லை.

# மத்திய வங்கியின் செயல்பாடு குறித்து நிதி, கோப் குழுக்கள் விசாரிக்க முடியும்

**சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு**



கொழும்பு, மே 08

மத்திய வங்கியின் செயல்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்தின் நிதி குழுவுக்கும் கோப் குழுவுக் கும் அந்த அதிகாரிகளை அழைத்து விசாரணைகளை நடத்த முடியும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரி வித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அது தொடர்பில் எதிர்க் கட்சி எம். பிக்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக் கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய வங்கிக்கும் அரசாங்கத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்ற நிலைப்பாட்டில் அந்த வங்கி செயல்படுகிறது. அந்த செயல்பாடுகள் பார தூரமானவை. அந்த அதி காரிகளை பாராளுமன் றத்துக்கு அழைத்து விசா ரணை நடத்த வேண்டும் என்று பேராசிரியர் சரித ஹேரத் எம். பி. நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்போது, கருத்து ரைத்த லக்ஷ்மன் கிரி யெல்ல எம். பி., புதிய அறிக்கையின்படி மத்திய வங்கி கடந்த வருடத்தில் ஆயிரம் மில்லியன் ரூபாய் நட்டமடைந்துள்ளது. எனி னும், அவர்களின் செயல் பாடுகள் மூலம் 70 வீத சம்பள அதிகரிப்பை மத்திய வங்கி அதிகாரிகள் மேற் கொண்டுள்ளனர். இது எந்த வகையில் நியாயம் - என் றார்.

இந்த விடயம் தொடர் பில் விமல் வீரவன்ச எம் பி சபையில் தெரிவிக்கையில், சம்பள அதிகரிப்பு ஒரு புறம் இருக்க மத்திய வங்கி தான் ஓர் அரசாங்க நிறுவ னமல்ல அரசாங்கத்துக்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டியதில்லை என்ற சிந்தனையுடன் செயல்படு வது பாரதூரமான விடய மாகும். அது தொடர்பில் முதலில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அந்த சிந்தனையிலிருந்து மத்திய வங்கியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும் - என்றார்.

மேற்படி மூவரின் கேள்விகளுக்கு பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, மூன்று எம். பிக்களும் சுட்டிக்காட்டியுள்ள விட யங்கள் தொடர்பில் கவனம் செலுத்த முடியும். அத்து டன், மத்திய வங்கியால் நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ள அறிக் கையை கோப் குழுவுக்கு கொண்டு வரவும் முடியும். ஏனெனில், மத்திய வங்கி கோப் குழுவுக்கு கட்டுப் பட்ட நிறுவனமாகும். மறு புறம் அதனை நிதி குழுவுக்கு அழைக்கவும் முடியும். சபா நாயகர் உரிய பணிப்புரை விடுத்தால் அதனை மேற் கொள்ள முடியும் - என்றார்.

# திருநெல்வேலி வர்த்தகருக்கு ரூ. ஒன்றரை இலட்சம் அபராதம்

யாழ்ப்பாணம், மே 08

திருநெல்வேலி பகுதியில் உள்ள பல்பொருள் அங் காடி ஒன்றின் உரிமையாள ருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டுள் ளது.

பொது சுகாதார பரிசோ தகரால் முன்னெடுக்கப் பட்ட திடீர் சோதனை நட வடிக்கையின்போது உரிய முறையில் வண்டுகள் மொய்த்த பழுதடைந்த பொருட்கள் என்பவற்றை விற்பனைக்காக வைத்தி ருந்த குற்றச்சாட்டில் கடந்த மார்ச் 18ஆம் திகதி உரிமை யாளருக்கு எதிராக யாழ். மேலதிக நீதிவான் நீதிமன் றில் வழக்கு தொடரப்பட் டது.

நேற்று நடந்த வழக்கு விசாரணையில் வர்த்தக நிலைய உரிமையாளரை கடுமையாக எச்சரித்த நீதிமன்றம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.

(ஐ)

# எம். பியின் வீட்டுக்கும் மின்சாரம் துண்டிப்பு!

கொழும்பு, மே 08

எந்தவித முன்னறிவிப் பும் இன்றி தனது வீட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட் டதாக சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராராச்சி பாரா ளுமன்றத்தில் நேற்று தெரி வித்தார்.

12 ஆயிரம் ரூபாய் கட்ட ணத்தை தான்செலுத்த வேண்டும் என்று கூறிய அவர், பாராளுமன்ற உறுப் பினர் வீட்டில் முன்னறிவிப் பின்றி மின்சாரம் துண்டிக் கப்பட்டால், சாமானியர் களின் வீடுகளில் எப்படி மின்சாரம் துண்டிக்கப்படும் என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை - என்றார்.

இதன்போது பதிலளித்த மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜய சேகர அதற்காக வருந்துவ தாக தெரிவித்துள்ளார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 08 புதன்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 25
நல்ல நேரம் : 09.30 - 11.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : பிரதமை

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டிவரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**இடபம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**கடகம்**
உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாக பேசத் தொடங்குவார்கள்.வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**துலாம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**விருச்சிகம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர்யோகம் கிட்டும் நாள்.

**தனுசு**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்து வந்த மன உளைச்சல் நீங்கி தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

# “இது சொல்லாட்சி அல்ல; செயலாட்சி”

## தி. மு. க. ஆட்சி குறித்து ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, மே 08

“மு. க. ஸ்டாலின் என்றால் செயல் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளேன்” என 3 ஆண்டுகள் தி. மு. க. ஆட்சி நிறைவடைந்து 4 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நிலையில் தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

ஸ்டாலின் இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் “முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் உங்கள் நல் ஆதரவையும் நம்பிக்கையும் பெற்று ஆட்சி பொறுப்பேற்றேன்.

தற்போது இந்த ஆட்சி 3 ஆண்டுகளை முடித்துவிட்டு, நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இந்த 3 ஆண்டுகால ஆட்சியில் மக்கள் பல திட்டங்களால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தினந்தோறும் பயனடைந்த மக்களின் முகங்களில் இருக்கும் மகிழ்ச்சியே அதற்கு சாட்சி.

ஸ்டாலின் என்றால் உழைப்பு, உழைப்பு என சொன்னார் கலைஞர். இந்த 3 ஆண்டு காலத்தில் ஸ்டாலின் என்றால் செயல், செயல், செயல் என நிரூபித்துக் காட்டியுள்ளேன். இது எனது அரசு அல்ல, நமது அரசு. அந்த வகையில், நாடும் மாநிலமும் பயன் பெற உழைப்பேன் என உறுதியேற்று ஆட்சி பயணத்தை உங்கள் வாழ்த்தோடு தொடர்வேன்”-எனப் பதிவிட்டுள்ளார்.

# கருணாநிதியின் நினைவிடத்தில் முதல்வர் ஸ்டாலின் மரியாதை

சென்னை, மே 08

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் நினைவிடத்தில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

தமிழகத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் தி. மு. க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. மே மாதம் 7 ஆம் திகதி முதலமைச்சராக மு. க. ஸ்டாலின் பதவி ஏற்றுக்கொண்டார். அவருடன் புதிய அமைச்சரவையும் பொறுப்பு ஏற்றுக்கொண்டது.

இந்த நிலையில், தி. மு. க. ஆட்சி பொறுப்பேற்று நேற்று செவ்வாய்க்கிழமை 4 ஆம் ஆண்டு தொடங்குவதையொட்டி,



சென்னை மெரினா கடற்கரையிலுள்ள அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி நினைவிடங்களில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார். (எ)

# சவுக்கு சங்கர் தாக்கப்பட்டாரா?

சென்னை, மே 08

பிரபல யூரி யூப்பர் சவுக்கு சங்கர், ஒரு யூரியூப் சனலுக்கு வழங்கிய நேர்காணலில், பொலிஸ் அதிகாரிகள் குறித்து அவதூறாக பேசினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. மேலும் பெண் பொலிஸார் குறித்தும் பாலியல் தொடர்பான கருத்துகளை தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து கோவை சைபர் க்ரைம் பொலிஸாரிடம், பெண் பொலிஸ் அதிகாரி சுகன்யா முறைப்பாடு செய்தார். இதன் பேரில் சவுக்கு சங்கர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து சவுக்கு சங்கரை தேனியில் வைத்து கடந்த 4 ஆம் திகதி கோவை சைபர் க்ரைம் பொலிஸார் கைது செய்து கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில், கோவை சிறையில் சவுக்கு சங்கர் தாக்கப்பட்டாரா? என நீதிபதி மூலம் விசாரணை நடத்த வேண்டும் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

பத்திரிகை சுதந்திரம் என்று மூச்சுக்கு முன்னூறு தடவை வாய்ச்சவடால் விடும் தி. மு. க. அரசில் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவது சர்வ சாதாரணமாகிவிட்டது. மேலும், பெண்களை இழிவாகப் பேசிய, பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்ட பல தி. மு. கவினர் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால் அவர்கள் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர். சட்ட நடவடிக்கைகளும் நீதியும் அனைவருக்கும் சமமானதாக இருக்க வேண்டும் - என்றார். (எ)

# இந்துக்களின் உரிமை பாதிப்பு

## இந்து முன்னணி கண்டனம்

சென்னை, மே 08

தமிழக அரசு இந்துக் கோவில்களை மட்டும் குறிவைத்து சீரழிப்பதாகவும், தமிழக வனத்துறையும், யானை வழித்தட வரைவு அறிக்கை என்ற பெயரில் இந்து பக்தர்களை வஞ்சிப்பதாகவும் இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் கண்டனம் வெளியிட்டார்.

யானைகளைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில் இந்துக்களின் உரிமைகளைப் பறிக்கும் புதிய யானை வழித்தட பரிந்துரையை தமிழக அரசு ஏற்கக்கூடாது.

மருதமலை, வெள்ளியங்கிரி மலை உட்பட தமிழகத்தின் பல கோவில்களுக்கு சிக்கல் ஏற்படுத்த திட்டமிட்டு சதி அரங்கேற்றப்பட்டுள்ளது- என்றார்.

# “தமிழகத்தில் தடையின்றி மின்சாரம் விநியோகம்”

சென்னை, மே 08

விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் மட்டுமின்றி நுகர்வோர்களுக்கும் மின்சாரம் தடையின்றி வழங்கப்பட்டு வருவதாக அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களில் மும்முனை மின்சாரம் சீராக வழங்கப்படவில்லை என்றும், இதனால் [illegible] [illegible] கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டியுள்ளார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் தமிழக அரசின் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில், தமிழ்நாட்டின் டெல்டா பகுதியில் 12 மணி நேரமும், பிற பகுதிகளில் 9 மணி நேரமும் மட்டும்தான் மும்முனை மின்சாரம் என்று இருந்த நிலையினை மாற்றி, உழவர்களின் நலனை எப்பொழுதும் முதன்மையாக கருதக்கூடிய இந்த அரசு கடந்த 2021 இல் பதவியேற்றது முதல், நாள் ஒன்றுக்கு 12 முதல் 16 மணி நேரம் வரை தமிழ்நாடு முழுவதும் விவசாயத்துக்கான மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் பயனாக தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பொது மருத்துவமனைக்கு ரூ. 60 கோடி இந்திய அரசு நன்கொடை

யாழ்ப்பாணம், மே 08

**மன்னார் பொது மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கான கட்ட நிர்மாணம் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்காக 60 கோடி ரூபாயை நன்கொடையாக இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளது.**

இலங்கையின் இந்திய தூதரகம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நன்கொடை அளிக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸின் நெறிப்படுத்தலின் கீழ், மாகாண சபையால் திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் ஊடாக கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்திடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இந்திய அரசாங்கம் 600 மில்லியன் ரூபாயை நன்கொடையை வழங்குவதற்கான அனுமதியை அளித்துள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு இன்மையால் மக்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கும் முகமாக வடக்கு மாகாண ஆளுநரால் இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# நல்லூர் பிரதேச சபையின் குப்பை கிடங்கில் தீ பரவல்!

யாழ்ப்பாணம், மே 08

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகையில் உள்ள இணுவில் குப்பைக் கிடங்கில் நேற்று முன்தினம் இரவு பெரும் தீ பரவல் ஏற்பட்டது.

இணுவில் - காரைக்காலில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபையின் குப்பைக் கிடங்கிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

திடீரென ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேர முயற்சியின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ பரவிய நேரம் முதல் பிரதேச சபை செயலாளர் உள்ளிட்ட பிரதேச சபை ஊழியர்கள் பலரும் சம்பவ இடத்தில் நின்று அதனை கட்டுப்படுத்த பெரும் முயற்சி செய்தனர்.

இதேவேளை, இந்தக் குப்பைக் கிடங்கில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பும் பெரும் தீ பரவல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அச்சுவேலி மகிழடி வைரவர் ஆலயத்தில் செந்தமிழ்ச் சொல்லருவிக்கு கௌரவிப்பு



யாழ்ப்பாணம், மே. 08

அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு அண்மையாக உள்ள மகிழடி வைரவர் ஆலய அலங்கார உற்சவ நிறைவையொட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற சப்பை ரதத் திருவிழாவில் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

இதில், ஆலய பிரதமகுரு சிவசிறீ க. ஓம்முருகையா சிவாச்சாரியார், திருவிழா குரு சிவசிறீ பா. சோமசுந்தரக் குருக்கள், வைரவர் வழிபாட்டின் மகத்துவம் என்ற பொருளில் ஆன்மீக உரையாற்றிய செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் சப்பை ரதத் திருவிழா உபயகாரராலும் ஆலயத் தொண்டர் சபையினராலும் பொன்னாடை அணிவித்தும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

## வித்தியா கொலை மேன்முறையீட்டு வழக்கு

# விசாரணைகளில் இருந்து நீதியரசர் துரைராஜா விலகல்!

கொழும்பு, மே 08

மாணவி வித்தியா படுகொலையில் குற்றவாளிகள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு வழக்கு விசாரணையில் இருந்து நீதியரசர் எஸ். துரைராஜா விலகியுள்ளார்.

புங்குடுதீவில் கடந்த 2015 மே 14ஆம் திகதி சிவலோகநாதன் வித்தியா என்ற 18 வயது மாணவி கூட்டுப் பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் 2017 செப்ரெம்பரில் ட்ரயல் அட் பார் 7 பேருக்கு மரண தண்டனை வழங்கியது.

தண்டனை பெற்ற சுவிஸ் குமார் உள்ளிட்ட ஐவர் மேன்முறையீடு செய்தனர். இந்த மேன்முறையீட்டை விசாரிக்க பிரதம நீதியரசரால் ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது.

எஸ். துரைராஜா, யசந்த கோதாகொட, ஏ. எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பேர்னாண்டோ ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இதன்போது, ஐவர் அடங்கிய அமர்வின் தலைமை நீதியரசர் எஸ். துரைராஜா, தான் சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமையாற்றிய காலத்தில் இந்த வழக்கின் விவகாரங்களை மேற்பார்வையிட்டதால் இந்த மேன்முறையீட்டு விசாரணையில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகக் கூறினார்.

மேலும், இது தொடர்பான மேன்முறையீட்டு மனுக்களை ஜூலை 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது.

வழக்கு தொடர்பான மொழிபெயர்ப்புகள் உரிய முறையில் கிடைக்காததால் வழக்கு விசாரணை சுமார் 6 வருடங்களாக தாமதமாகியுள்ளதாக மேன்முறையீட்டு பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அதற்கு பதிலளித்த நீதியரசர் துரைராஜா, மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறையால் இந்த நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பிரதிவாதிகள் தமது மேன்முறையீட்டில், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தமக்கு எதிராக தண்டனை வழங்கிய விதம் சட்டத்துக்கு முரணானது. எனவே அந்த தண்டனைகளில் இருந்து தம்மை விடுதலை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு குறிப்பிட்டுள்ளனர்.

(ஐ)

# ஆயுள்வேத திணைக்கள குளறுபடியால் 359 சித்தமருத்துவ மாணவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 08

நாடு முழுவதும் 359 சித்தமருத்துவ மாணவர்கள் உள்ளக பயிற்சிக்காக காத்திருக்க வேண்டிய அவல நிலை காணப்படுவதாக உள்ளக பயிற்சிக்கு எதிர்பார்க்கும் சித்த மருத்துவ மாணவர் குழுவின் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிநிதி வர்ணகுல சிங்கம் பிரவீன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஆயுள்வேத திணைக்களத்தின் குளறுபடியான சில நடவடிக்கைகள் மூலம் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். இதனால் நமது உள்ளக பயிற்சி தடைபட்டுள்ளது.

அவர்களுடன் எங்களுடைய பிரச்னை தொடர்பில் பேசிய போதிலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 60 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கி இருப்பதாக அவர்கள் தெரிவித் தனர்.

உள்ளக பயிற்சி என்பது அனைத்து மாணவர்களுக்கும் மான உரிமையாகும்.

எவ்வாறு 60 மாணவர்களுக்கு மாத்திரம் இந்த அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்க முடியும். அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு காரணமாகவே இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள போதிலும் இது அரசாங்கத்தின் தவறே தவிர, மாணவர்களுடைய தவறல்ல.

இதற்குக் காரணம் ஆயுள்வேத திணைக்களம் உள்ளிட்ட ஏனைய திணைக்களங்கள். இவர்களுடைய இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் நமது கற்கை நெறியை பூரணமாக நிறைவு செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம்.

தற்பொழுது 30 வயதை எட்டியுள்ளபோதிலும் நீண்ட காலமாக உள்ளக பயிற்சியை முடிக்காததால் எமது கற்கை பூரணப்படுத்தப்படவில்லை. உள்ளக பயிற்சி நிறைவு செய்யப்பட்டால் மாத்திரமே ஆயுள்வேத சங்கத்தில் எங்களை ஒரு வைத்தியராக பதிவு செய்ய முடியும் - என்றார்.

# அனுமதிக்கப்படாத இடத்தில் மணல் அகழ்ந்த 6 பேர் கைது!



கிளிநொச்சி, மே 08

கிளிநொச்சியில் அனுமதிக்கப்படாத பகுதியில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 6 டிப்பர் வாகனங்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவில் கல்லாறு பகுதியில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படை நடத்திய சுற்றிவளைப்பில் இந்தக் கைது இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட சாரதிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மணலுடன் நீதிமன்றில் முற்படுத்துவதற்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

(ஐ)

# மின்சக்தி சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றில் மனு!

கொழும்பு, மே 08

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சக்தி சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்குமாறு கோரி உயர்நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சேவையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜயலால் உள்ளிட்ட குழுவினர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 நாட்களில் மீள் இணைப்பு பெறாவிடின் பாவனையாளரின் கணக்கு இரத்தாகும்!

## அமைச்சர் காஞ்சன விஜயசேகர



கொழும்பு, மே 08

**மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு 90 நாட்களுக்குள் மீள் இணைப்பை பெறாத பாவனையாளர்களின் மின் கணக்கு இரத்து செய்யப்பட்டு மின் விநியோகம் முழுமையாக துண்டிக்கப்படும். மீள் மின் இணைப்புக்காக அறவிடப்படும் கட்டணம் தற்போது குறைக்கப்பட்டுள்ளது என்று மின்சாரத் துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியின் உறுப்பினரான கெவிந்து குமாரதுங்கவின் கேள்விக்கு பதிலளித்தபோதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு,

2022 மே மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னரான காலப்பகுதியில் 70 இலட்சம் மின்பாவனையாளர்கள் மின்விநியோக கட்டமைப்பில் பாதிக்கப்பட்டிருந்தார்கள். பல மணித்தியாலங்கள் மின்விநியோக துண்டிப்பு அமுல்படுத்தப்பட்டது. ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து மின் கட்டமைப்பில் கொள்கை ரீதியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

மின்விநியோக கட்டமைப்பின் கொள்கை திருத்தம் செய்யப்பட்டதால் தற்போது பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. கட்டணத்தை தொடர்ந்து குறைக்க முடியுமா என்று முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம்.

சிவப்பு எச்சரிக்கை கட்டண படிவம் விநியோகிக்கப்பட்டு நிலுவை கட்டணம் செலுத்தாத சுமார் 10 இலட்சம் மின் பாவனையாளர்களுக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மின்விநியோகம் துண்டிக்கப்பட்டு 90 நாட்களுக்குள் நிலுவை கட்டணத்தை செலுத்தாவிடின் மின்விநியோகம் முழுமையாக துண்டிக்கப்பட்டு, மின்பாவனைக்கான கணக்கும் இரத்து செய்யப்படும்.

மின்கட்டணத்தை செலுத்தாத தரப்பினரை இலக்கு வைத்து அவர்களுக்காக விநியோகத்தை துண்டிக்குமாறு எவருக்கும் பொறுப்பு வழங்கவில்லை. கட்டணம் செலுத்தாவிடின் மின்விநியோகம் துண்டிக்கப்படும் இது நான் அமைச்சரான பின்னர் எடுத்த தீர்மானமல்ல, காலம் காலமாகவே அமுல்படுத்தப்படுகிறது.

சிவப்பு எச்சரிக்கை கட்டண படிவம் வழங்கப்பட்டு, கட்டணம் செலுத்துவதற்கு காலவகாசம் வழங்கப்படும். அந்த காலப்பகுதிக்குள் கட்டணத்தை செலுத்தாவிடின்தான் மின் விநியோகம் துண்டிக்கப்படும்.

மின்விநியோகம் துண்டிக்கப்பட்டு, மீள இணைப்பைப் பெற்றுக்கொள்ளப்படும் போது அறவிடப்படும் கட்டணம் தற்போது குறைக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# வவுனியா, முல்லை, மன்னாரில் இன்றுமுதல் மழை கிடைக்கும்!

கொழும்பு, மே 08

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இன்று புதன்கிழமை முதல் சில தினங்களுக்கு மழையுடனான வானிலை அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் மேல், சபரகமுவ, மத்திய மாகாணங்களிலும் இன்று பிற்பகல் 2 மணிக்கு பின்னர் மழை பெய்யக் கூடும்.

வடமேல், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் இடியுடன் மழை வீழ்ச்சி கிடைக்கலாம். இந்தப் பகுதிகளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி கிடைக்கலாம்.

அத்துடன் மத்திய, சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கத்தால் ஏற்படக்கூடிய அபாயங்களை குறைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# குடும்பஸ்தரை தாக்கியவரை கைது செய்யுமாறு ஆர்ப்பாட்டம்

வவுனியா, மே 08

புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் முன்னிலையில் இளம் குடும்பஸ்தரை தாக்கியவரை கைது செய்யுமாறு கோரி வவுனியா - கண்டி வீதியில் அமைந்துள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் முன்பாக நேற்று கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

தாக்குதலுக்குள்ளான நபர் உட்பட 40இற்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்ப்பாட்டக்காரர்களின் சார்பாக 10 பேரை அழைத்து பேசியிருந்தார்.

இதன்போது பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கிய வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நபரை 3 தினங்களுக்குள் கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். இதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ஐ)

# பாதாள உலகக்குழுவை சேர்ந்த இருவர் கைது!

கொழும்பு, மே 08

பாதாள உலகக் குழுவை சேர்ந்த "மாகொல சுதா" உட்பட இருவர் ஐஸ் போதைப்பொருள் மற்றும் பணத்துடன் கைது செய்யப்பட்டனர் என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் பணம் , சொகுசு கார், 33 கிராம் 330 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், இலத்திரனியல் தராசு, 5 கைபேசிகள், பண பரிவர்த்தனை புத்தகம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை கைது செய்தபோது ஏற்பட்ட மோதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்து ராகம போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# லிற்றோ எரிவாயு நிரப்பு முனையம் இன்று திறந்து வைக்கப்படுகின்றது

கொழும்பு, மே 08

கொழும்பு - கடுவலை - மாபிம பகுதியில் புதிய எரிவாயு நிரப்பு முனையம் இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது என்று லிற்றோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

"புதிய நிரப்பு முனையம் நாளை திறக்கப்படும். கெரவலப்பிட்டி முனையம் போதாது. நாளொன்றுக்கு 60 ஆயிரம் சிலிண்டர்கள் விநியோகிக்கப்படுகின்றன.

டிசெம்பரில் இருந்து வாரத்தில் 2 நாட்கள் பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் கெரவலப்பிட்டி மற்றும் மாபிம இரண்டும் செயல்பாட்டில் இருந்தன. கெரவலப்பிட்டியை நிறுத்த வேண்டி ஏற்பட்டால் மாபிமவில் இருந்து தொடர்ச்சியாக எரிவாயுவை விநியோகிக்க முடியும் - என்று தெரிவித்தார். (ஐ)

# பௌசி எம். பியின் மகன் கைதானார்!

கொழும்பு, மே 08

பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எச். எம். பௌசியின் மகனை கொள்ளுப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

கொள்ளுப்பிட்டி பகுதியில், இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த நபரை தாக்கியதை அடுத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

கைது செய்யப்பட்டவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ரி. ஐ. டியால் கைது செய்யப்பட்ட கைதிகளை சந்தித்த எம். பிக்கள்!



கொழும்பு, மே 08

பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், செ. கஜேந்திரன் ஆகியோர் நேற்று வெலிக்கடை சிறைக்கு சென்று பார்வையிட்டனர்.

கடந்த பெப்ரவரி மாதம் பயங்கரவாத விசாரணை பிரிவால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்ட வவுனியாவை சேர்ந்த முன்னாள் போராளி செல்வநாயகம் ஆனந்தவர்ணன், கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக நீதிமன்றில் முற்படுத்தப்படாமல் அடைத்து வைக்கப் பட்டிருக்கும் மூதூரை சேர்ந்த எஸ். சுதாகரன் ஆகியோரையே இவர்கள் நேற்று சந்தித்தனர்.

இதன்போது, தனது விடுதலையை வலியுறுத்தி கடந்த இரண்டு நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக ஆனந்தவர்ணன் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தார் என்றும் தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரியதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தான் பொய்க் குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் தனது தரப்பு கருத்துகளை கூறுவதற்கான வாய்ப்புகள் எதுவும் வழங்கப்படாமலேயே விளக்கமறியிலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த வழக்கு தவணை எப்போது என்றுகூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று மூதூரைச் சேரந்த எஸ்.சுதாகரன் என்பவரும் இந்தியாவிலிருந்து திரும்பும்போது கைது செய்யப்பட்டு கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தனது விடுதலைக்காகவும் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார். (ஐ)

# மரத்தைத் தறித்தவர் தவறிவீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம், மே 08

மரத்தில் ஏறி அதனைத் தறித்துக் கொண்டிருந்தவர் தவறி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

[illegible] நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில், கலாசாலை வீதி, திருநெல்வேலியை சேர்த்த செல்வமுத்து சிவலிங்கம் (வயது -62) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

ஆலய வளவில் நின்ற வேப்ப மரத்தை தறித்துக்கொண்டிருந்த வேளையிலே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் உரிமை பிரச்னைக்கு எனது ஆட்சியில் நிச்சயம் தீர்வு!

**ஜித் பிரேமதாஸ சொல்கிறார்**

கொழும்பு, மே 08

**நாட்டில் நீண்ட காலமாக நிலவிவரும் தமிழ் மக்களின் உரிமை பிரச்னைகளுக்கு எனது ஆட்சியில் தீர்வுகளை வழங்குவேன் என்று எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும், வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களின் உரிமைகளுக்காக நான் என்றுமே குரல் கொடுத்து வருகின்றேன்.

நான் ஜனாதிபதியாக வந்தவுடன் அவர்களுக்கான உரிமைகளை அவர்கள் எதிர்நோக்கும்



பிரச்னைகளுக்கான தீர்வுகளை வழங்கியே தீருவேன். இன, மத பேதமின்றி அனைத்து மக்களுக்காகவும் எனது சேவை தொடரும் - என்றார். (ஐ)

## சுதந்திர கட்சி தலைமையகத்துக்கு சந்திரிகா குமாரதுங்க திடீர் வருகை!

கொழும்பு, மே 08

சுமார் ஐந்து வருடங்களின் பின்னர் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்துக்கு சந்திரிகா குமாரதுங்கா சென்றுள்ளார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சி இரண்டாக பிளவடைந்து குழப்பங்களுக்குள் சிக்கியுள்ள நிலையில் சந்திரிகா நேற்றுமுன்தினம் கட்சி தலைமையகத்துக்கு சென்றுள்ளார்.

சந்திரிகாவுடன், அந்தக் கட்சியை சேர்ந்த அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க ஆகியோரும் சென்றுள்ளனர்.

தலைமையகத்தை விட்டு வெளியேறியபோது ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சந்திரிகா,

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் முக்கியஸ்தர்களுடன் விசேட கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. நான் எப்போதும் கட்சியிலேயே இருந்தேன். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பிரிந்து சென்றார். அதன் பின்னர் நான் தலைமையகத்துக்கு வரவில்லை - என்றார்.

சந்திரிகா சுதந்திர கட்சி தலைமையகத்துக்கு திடீரென சென்றமை தென்னிலங்கை அரசியல் தரப்பில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## பல கொலைகளுடன் தொடர்புடைய கெமோண்டோ பிரிவை சேர்ந்தவர் கைது!

கொழும்பு, மே 08

சுகாதார பரிசோகர் சுட்டுக் கொல்லப்பட்டமை உள்ளிட்ட பல கொலைகளுடன் தொடர்புடைய இராணுவ கொமோண்டோ பிரிவை சேர்ந்தவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

வேறு ஒரு பெயரில் தயாரிக்கப்பட்ட போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி டுபாய்க்கு தப்பிச் செல்ல முயன்ற போதே நேற்று முன்தினம் இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் கடவுச்சீட்டு முக அங்கீகார முறைமை (**Facial Recognition System**) மூலம் அடையாளம் காணப்பட்ட பின்னரே கைது செய்யப்பட்டார். கைதானவர் இவர் எல்பிட்டிய கரந்தெனிய பகுதியை சேர்ந்த 30 வயது நபராவார்.

சந்தேகநபர் இராணுவத்தின் கொமாண்டோ பிரிவில் பணியாற்றியவர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பிரித்தானிய உயர் குழுவுடன் எதிர்க்கட்சி தலைவர் சந்திப்பு

கொழும்பு, மே 08

பிரித்தானிய வெளிவிவகார பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி பணிமனையின் இந்து - பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மேலருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடந்தது.

இந்த சந்திப்பில், இலங்கை தற்போது எதிர்நோக்கும் வங்குரோத்து நிலை குறித்து இரு தரப்பினருக்கும் இடையில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. இதில் இருந்து விடுபட தாம் மற்றும் தமது குழுவினர் மேற்கொள்ளும் திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மேலும், தற்போதைய அரசாங்கத்தின் மோசமான ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து, மக்கள்சார் ஆட்சியை எதிர்பார்க்கும், மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழித்து தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் முயற்சியை தோற்கடிக்க வேண்டும் எனவும், மக்



கள் எதிர்பார்க்கும் ஆட்சியை உருவாக்குவதே தனதும் தனது குழுவின் நோக்கம் எனவும் சஜித் தெரிவித்தார்.

பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இலங்கைப் பிரதானி ஹூமைரா ஹாடியா, இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பெட்ரிக், முதல் செயலாளர் டொம் சோப்பர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, நிரோஷன் பெரேரா ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## 5 கிலோ கஞ்சாவுடன் வவுனியா இளைஞர் கைது

வவுனியா, மே 08

வவுனியாவில் 5 கிலோ கஞ்சா போதைப்பொருளுடன் ஒருவரை அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

வவுனியா புளியங்குளம் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு அதிரடிப் படையினர் தாண்டிக்குளத்தில் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை சோதனைக்கு உட்படுத்தியபோது சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோ 124 கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

வவுனியா - செக்கட்டிப்பிளவு பகுதியை சேர்ந்த 26 வயது இளைஞரே செய்யப்பட்டார். (ஐ)

## பரிசு கிடைத்ததாகக்கூறி மோசடி செய்தவர் கைது!

கொழும்பு, மே 08

நத்தார் பரிசு கிடைத்ததாகக் கூறி பெண் ஒருவரிடம் பண மோசடி செய்தார் என்று கூறப்படும் நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர் மொரட்டுவை பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

காலி மாவட்டத்தை சேர்ந்த பெண் ஒருவருக்கு நத்தார் பரிசு வெளிநாட்டில் இருந்து கிடைத்ததாகக் கூறி 30 ஆயிரம் ரூபாய், 56 ஆயிரம் ரூபாய் என 86 ஆயிரம் ரூபாயை சந்தேகநபர் இரு சந்தர்ப்பங்களில் பெற்றுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் பரிசுப் பொருள் வந்ததாகக் கூறி பணம் கேட்டுள்ளார். அவர் 30 ஆயிரம் ரூபாயை வழங்கியுள்ளார்.

பணம் அனுப்பிய பெண்ணை மீண்டும் தொடர்பு கொண்ட சந்தேகநபர் அது கறுப்பு பணம் என்று கூறியுள்ளார். 56 ஆயிரம் ரூபாயை வைப்பிலிடாவிடின் கறுப்பு பணம் வைத்திருந்த குற்றத்துக்காக சிறை செல்ல வேண்டியிருக்கும் என்றுகூறி மிரட்டியுள்ளார்.

இதனால், பணத்தை வைப்பிலிட்டுள்ளார். எனினும், அந்தப் பெண்ணுக்கு பரிசுப் பொருள் எதுவும் கிடைக்கவில்லை.

இதைத் தொடர்ந்து அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை நடத்திய பொலிஸார் சந்தேகநபரை தற்போது கைது செய்துள்ளனர்.

## "கடலலைகளை மேவிய கதை" நாவல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 07

எழுத்தாளரும் ஊடகவியலாளருமான அலெக்ஸ் பரந்தாமனின் "கடலலைகளை மேவிய கதை" நாவல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் எழுத்தாளரும், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான மு. அநாதரட்சகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூல் அறிமுக உரையை எழுத்தாளர் டயானா நியூட்டன், நூல் மதிப்பீட்டுரையை ஆய்வாளர் ... ஆகியோர் ஆற்றுவர். (ஐ)

## காதலியிடம் சென்றபோது காணாமல்போன இளைஞரின் சடலம் காட்டில் மீட்கப்பட்டது

கொழும்பு, மே 08

காதலியை பார்க்கச் சென்றபோது காணாமல் போனார் என்று கூறப்படும் 32 வயது இளைஞரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

புத்தளம் - மாதம்பே பகுதியிலுள்ள காட்டுப் பிரதேசத்தில் அவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குருநாகல் - குளியாப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 18 வயதான தனது காதலியை பார்ப்பதற்கு சென்ற 32 வயது இளைஞர் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி காணாமல் போயிருந்தார்.

காதலியின் அழைப்பின் பேரிலேயே இவர் அங்கு சென்றார் என்றும் அங்கு சென்றவரை காதலியின் தந்தை கைவிலங்கிட்டு கடத்திச் சென்றார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து அந்த இளைஞரை அரசியல்வாதி ஒருவரின் வீட்டுக்கு கொண்டு சென்று தாக்கினர் என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையிலேயே, மாதம்பே பகுதியில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது.

இளைஞன் காணாமல் போயிருந்த தினத்தில் இருந்து காதலியின் குடும்பமும் காணாமல் போயிருந்தது. இந்த நிலையில், இளைஞரை கடத்தினார் என்று கூறப்படும் காதலியின் தந்தை நேற்று முன்தினம் பொலிஸில் சரணடைந்தார்.

காதலி கர்ப்பமானதை தொடர்ந்து அவரின் குடும்பத்தினரால் இளைஞர் கொல்லப்பட்டார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு குற்றங்களில் தொடர்பு:

# காத்தான்குடியில் 67 பேர் ஒரு வாரத்தில் கைதாகினர்!

காத்தான்குடி, மே 08

குற்றச்செயல்கள், போதை பொருள் விற்பனை - பாவனை போன்றவற்றுடன் தொடர்புடைய 67 பேர் கடந்த ஒரு வார காலத்தில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்டனர் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி. கஜநாயக்க தெரிவித்தார்.

திருட்டு சம்பவங்கள், கசிப்பு விற்பனை, கசிப்பு உற்பத்தி, சட்டவிரோத சாராயம் விற்பனை, ஐஸ் போதை பொருள், ஹெரோயின், கேரள கஞ்சா, மற்றும் போதைப்பொருட்களுடன் தொடர்புபட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

ஏற்கனவே பிணை வழங்கப்பட்டவர்கள் மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் இதில் அடங்குவர்.

சந்தேகநபர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

## பள்ளிவாசல் உண்டியல் உடைத்து திருட்டு

காத்தான்குடி, மே 08

புதிய காத்தான்குடியிலுள்ள பள்ளிவாயல் ஒன்றின் உண்டியல் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டதாக பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி அப்றார் பள்ளிவாசல் உண்டியலே நேற்று முன்தினம் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டது.

பள்ளிவாசலுக்கு வந்த ஒருவர் உண்டியலை உடைத்து பணத்தை திருடும் காட்சி சி. சி. ரீ. வி. கமெராவில் பதிவாகியுள்ளது.

இது தொடர்க பள்ளிவாசல் நிர்வாகத்தினர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ஐ)

## கப்பம் கோரினார் மேஜர்; பொலிஸில் முறைப்பாடு

மட்டக்களப்பு, மே 08

கல்முனை இராணுவ முகாமை சேர்ந்த இராணுவ மேஜர் ஒருவர் 3 இலட்சம் ரூபாய் பணம் தருமாறு அச்சுறுத்தி மிரட்டி வருவதாக ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த ரங்கன் என அழைக்கப்படும் சாமித்தம்பி வேலாயுதம் என்பவரே இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு இடைத்தரகராக செயல்பட்டு வரும் நபரே இந்த முறைப்பாட்டை அளித்துள்ளார்.

## காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய திருக்குளிர்த்தி சடங்கு ஏற்பாட்டு கூட்டம்!



காரைதீவு, மே 08

பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசி திங்கள் திருக்குளிர்த்தி சடங்கு தொடர்பான ஆலோசனை குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது பிரதேச செயலாளர் சடங்கு தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரிடமும் ஏற்பாடு தொடர்பாக கலந்துரையாடினார்.

இதன்போது, திருக்குளிர்த்தி விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

12 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஊர்ப்பிரசித்தம் தொடர்பான பட்டய நிகழ்வு நடைபெறும்.

சடங்கு பெருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கடல் தீர்த்தம் எடுத்துவந்து திருக்கல்யாணக் கால் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 8 தினங்கள் நடைபெறும் வெருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையும்.

(ஐ)

# அம்பாறை மாவட்டத்தில் டெங்கு பரவும் அபாயம்!

அம்பாறை, மே 08

அம்பாறையின் கரையோர பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் மிகவும் முன் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் பரவலாக டெங்கு நோய் பரவக் கூடிய ஆபத்தான நிலைமை தோன்றியுள்ளதாகவும் அதனை கட்டுப்படுத்துவதற்கு பொது மக்கள் சுகாதார பிரிவினருக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சகீலா இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.



வெயில் காலநிலையிலும் இடையிடையே மழைவீழ்ச்சி பதிவாகிறது. இது டெங்கு நுளம்பு பெருகுவதற்கு சாதகமான சூழலை தோற்றுவிக்கக்கூடும். எனவே, பிரதேச மக்கள் தங்களது வீடு மற்றும் சுற்றுப்புற சூழல், பாடசாலைகள், நீர் தேங்கி நிற்கும் பொருட்கள், நீர் தேங்கும் இடங்கள், கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தோணி - படகு போன்ற இடங்கள் குறித்து அவதானத்துடன் அனைவரும் செயல்பட வேண்டும் - என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# கிண்ணியா நகர வடிவமைப்பு விசேட கலந்துரையாடல் நடந்தது!

கிண்ணியா, மே 08

கிண்ணியா நகரத்தை வடிவமைப்பு - ஒழுங்கமைப்பு செய்வது தொடர்பில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

கிண்ணியா பாலம் தொடக்கம் உப்பாறு பாலம் வரையிலான மட்டக்களப்பு ஏ - 15 வீதியை அடிப்படையாகக் கொண்டு கிண்ணியா பிரதேசத்தின் நகர வடிவமைப்பை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், முச்சந்தியிலிருந்து புகாரி சந்தி வரையிலான பகுதியும், புகாரி சந்தியிலிருந்து குட்டிக்கரசி பாலம் வரையிலான பகுதியும் நகர வடிவமைப்பு திட்டமிடலின் பிரதான பகுதிகளாக அடையாளம் காணப்பட்டது.

இந்நகர வடிவமைப்பு திட்டங்கள் தொடர்பில் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திணைக்கள தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் தங்களுடைய ஆலோசனைகளையும் முன் வைத்தனர். மேலும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் அவர்களது நகர திட்டமிடல் குழுவினரும் நிறுவனங்களுடைய தலைவர்களும் கலந்து கொண்டு ஆலோசனைகளை முன்வைத்தனர்.

இந்தக் கலந்துரையாடல் கிண்ணியா பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எல்.எம் அத்தாவுல்லா தலைமையில் கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

(ஐ)

## 200 மாணவர்களுக்கு சைக்கிள் அன்பளிப்பு

திருகோணமலை, மே 08

உதவி தேவைப்படும் 200 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று காலை திருகோணாமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை சிறுவர் அபிவிருத்தி நிதியத்துக்கு ஜப்பான் சிறுவர் நிதியத்தால் வழங்கப்பட்ட சைக்கிள்கள் மூன்று பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்த 200 மாணவர்களுக்கு



வழங்கப்பட்டன.

சிறுவர் நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அரியரட்ணம் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலக ஊழியர்கள், மாகாண கல்வி திணைக்கள அதிகாரிகள், திருகோணமலை வடக்கு கல்வி வலய அதிகாரிகள், அதிபர்கள், பெற்றோர்கள் உட்பட கலந்து கொண்டனர்.

(ஐ)

## போதை மாத்திரைகளுடன் ஊடகவியலாளர் கைது!

திருகோணமலை, மே 08

போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர், நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மொறவெவ பொலிஸ் பிரிவில் ஔவை நகர பகுதியில் வைத்து பிரதேச ஊடகவியலாளர் ஒருவரை போதை மாத்திரைகளுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.

கைதான அவரிடம் இருந்து 30 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. அந்த நபர் திருகோணமலையில் மருந்தகம் ஒன்றில் குறித்த போதை மாத்திரைகளை பெற்று விற்பனை செய்து வந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்க விளைவு தொடர்பில் மனு

## கோவிஷீல்ட் பற்றி விசாரிக்க உச்ச நீதிமன்றம் ஒப்புதல்

டில்லி, மே 08

கொரோனா நெருக்கடியின் போது பிரிட்டனைச் சேர்ந்த அஸ்ட்ராஜெனேகா மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் இணைந்து கோவிட் - 19 பாதிப்புக்கு தடுப்பூசியை உருவாக்கின. இந்தியாவில் இந்தத் தடுப்பூசியை சீரம் இன்ஸ்டிடியூட் நிறுவனம் தயாரித்து கொரோனாவுக்கான தடுப்பூசியாக கோவிஷீல்ட் என்ற பெயரில் விற்பனை செய்தது. இந்தியாவில் கோடிக்கணக்கானோருக்கு அந்த தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கோவிஷீல்ட் தடுப்பூசியை செலுத்திக் கொண்டசிலருக்கு பக்க விளைவுகள் ஏற்பட்டதாக பிரிட்டன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. 100 மில்லியன் வரை இழப்பீடு கோரப்பட்ட 50 வழக்குகள் தற்போது நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன.

அண்மையில் இது தொடர்பான வழக்கில் பதிலளித்த அஸ்ட்ராஜெனேகா நிறுவனம் கோவிஷீல்ட்தடுப்பூசி மிக அரிதான சந்தர்ப்பங்களில் பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என ஒப்புக் கொண்டது. இது அந்தத் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், கோவிஷீல்ட் தடுப்பூசி தொடர்பான பக்கவிளைவுகள் குறித்த விசாரணையை இந்தியாவில் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுக்கத் தொடங்கின. இதனை உச்ச நீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது.

# அமைதி பேச்சுக்கள் இடையே ரபா நகரின்மீது தாக்குதல்கள்

ரபா, மே 08

போர் நிறுத்தத்தை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் அமைதிப் பேச்சுக்களுக்கு இடையே ரபா நகர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அத்தோடு ரபா நகருக்குள் நுழைந்து தாக்கப் போவதாக சபதம் எடுத்துள்ள இஸ்ரேல் படைகள் தரைவழித் தாக்குதலுக்கு முன்னதாக மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நீடித்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. இதுவரை நடந்த பேச்சுக்களில் போர் நிறுத்தம் தொடர்பில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. கடைசியாக கெய்ரோவில் நடந்த பேச்சுக்களிலும் ஒப்பந்தம் இறுதி செய்யப்படவில்லை. அடுத்த கட்ட பேச்சுக்கள் தொடர்ந்து வருகின்றன.

எகிப்து மற்றும் கட்டார் நாடுகள் இணைந்து முன்மொழிந்துள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால், போர் நிறுத்த பேச்சுக்கான முயற்சிகள் ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்க, காஸாவில் தமது கடைசி இலக்கான ரபா நகரை சுற்றி வளைத்துள்ள இஸ்ரேல் படைகள்



அவ்வப்போது ரபா மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.

ரபா நகர்மீது மீண்டும் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. ஹமாஸ் அமைப்பினர் இருப்பதாக சந்தேகிக்கப்படும் இடங்களை குறிவைத்து குண்டுகள் வீசப்பட்டன. இந்தத் தாக்குதல்களில் 11 பேர் உயிரிழந்ததாகவும், பலர் காயமடைந்ததாகவும் அங்குள்ள குவைட் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

ரபாவில் தரைவழித் தாக்குதலுக்கும் இஸ்ரேல் படைகள் தயார் நிலையில் உள்ளன. ரபா நகருக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தப்போவதாக பல வாரங்களாக சபதம் செய்து வரும் இஸ்ரேல், தாக்குதலுக்கு முன்னதாக மக்களை வெளியேற்றும் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. கிழக்கு ரபாவிலுள்ள பலஸ்தீனியர்களை விரிவாக்கப்பட்ட மனிதாபிமான பகுதிக்கு செல்லுமாறு அறிவித்திருந்தது.

இந்நிலையில் காஸாவிலிருந்து தெற்கு இஸ்ரேலை நோக்கி ரொக்கெட்களை வீசித் தாக்கியதாக ஹமாஸ் அமைப்பின் கூட்டாளியான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு கூறியுள்ளது. இவ்வாறு இரு தரப்பும் மாறி மாறி தாக்குதலை முன்னெடுப்பதால் இறுதிக் கட்ட பேச்சுக்களின் முடிவில் அமைதி ஒப்பந்தம் ஏற்படுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இருதரப்புக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படாத பட்சத்தில், ரபா நகருக்குள் இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் பொதுமக்கள் மேலும் துன்பங்களை அனுபவிப்பார்கள் என்றும், பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் சர்வதேச அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (எ)

# பனாமா ஜனாதிபதி தேர்தலில் ஜோஸ் ரவுல் முலினோ வெற்றி!

பனாமா, மே 08

பனாமாவில் நடந்த ஜனாதி பதித் தேர்தலில் ஜோஸ் ரவுல் முலினோ வெற்றி பெற்றுள்ளார். அவர் முன்னாள் ஜனாதிபதி ரிக்கார்டோ மார்டினெல்லிக்கு மாற்றாக கடைசி நேரத்தில் ரிய லைசிங் கோல்ஸ் கட்சியின் வேட் பாளராக அறிவிக்கப்பட்டார்.

64 வயதான ஜோஸ் ரவுல் முலினோ 34.35 சதவீத வாக்கு களைப் பெற்றார். நிதி மோசடி குற்றச்சாட்டில் சிக்கிய முன்னாள் ஜனாதிபதி ரிக்கார்டோ மார்டினெல்லிக்கு 10 ஆண்டு கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதன் காரணமாக தேர்தலில் அவரால் போட்டி யிட முடியவில்லை.




“வெற்றிகரமாக பணி நிறை வடைந்தது. இந்த நாள் என் வாழ்நாளில் முக்கிய நாளாகும். தேசத்தை வழிநடத்தும் மிகப் பெரிய பொறுப்பை பனாமா மக்கள் எனக்கு வழங்கி யுள்ளனர். இது நடக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை” என வெற்றிக்குப் பிறகு பனாமா ஜனாதிபதி தெரிவித்தார். (எ)

# போர் நிறுத்தத்துக்கு தயார்: ஹமாஸ் அமைப்பு அறிவிப்பு

காஸா, மே 08

காஸாவில் இருந்து இஸ்ரேல் பாதுகாப்புப் படையினரைத் திரும்பப் பெறுவதற்கு ஈடாக ஹமாஸ் அமைப்பு பிடித்து வைத்திருக்கும் பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தியதில் அந்நாடு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோரை கொன்று குவித்தும், நூற்றுக்கணக்கானோரை பணயக் கைதிகளாக சிறைபிடித்தும் சென்றனர்.

எனினும், போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் அவர்களில் சிலரை இஸ்ரேல் மீட்டது. மீதமுள்ளவர்களையும் மீட்போம் என சூளுரைத்துள்ளது. ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் வரை ஓய மாட்டோம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு சபதம் எடுத்துள்ளார். இதற்காக தொடர்ந்து காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒப்பந்தத்தை எகிப்து மற்றும் கட்டார் நாடுகள் இணைந்து முன்மொழிந்தன. இதனை ஹமாஸ் அமைப்பு நேற்று ஏற்றுக் கொண்டது. போர் நிறுத்தத்துக்குத் தயார் என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்திலுள்ள விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை. ஆனால், சமீப நாட்களாக எகிப்து மற்றும் ஹமாஸ் அமைப்பின் அதிகாரிகள் கூறும்போது, அடுத்தடுத்த கட்டங்களாக போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்.

காஸாவில் இருந்து இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் திரும்பப்பெறப்படுவதற்கு ஈடாக, ஹமாஸ் அமைப்பு பிடித்து வைத்திருக்கும் பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என தெரிவித்தனர். (எ)

## ‘வாக்கு ஜிகாத்’, ‘இராம ராஜ்ஜியம்’ மக்களே முடிவு செய்ய வேண்டும்

பிரதமர் மோடி தெரிவிப்பு

இந்தூர், மே 08

“இந்தத் தேர்தலில் வெற்றி பெறப்போவது வாக்கு ஜிகாத்தா அல்லது இராம ராஜ்ஜியமா என்பதை மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்” என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம் கார்கோனில் பிரதமர் மோடி நேற்றுத் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். இதன்போது, “இந்தியா கூட்டணிக் கட்சியினர் தத்தம் வாரிசுகளைக் காப்பாற்றவே தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்களுக்கு மக்கள் நலன் பற்றி அக்கறை இல்லை. மக்களின் சுக, துக்கங்கள் பற்றிக் கவலை இல்லை. இந்தத் தேர்தலில் வெற்றி பெறப்போவது வாக்கு ஜிகாத்தா அல்லது இராம ராஜ்ஜியமா என்பதை மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.” - என்றார். (எ)

## குஜராத்தில் வாக்களித்தார் பிரதமர் நரேந்திர மோடி

அகமதாபாத், மே 08

மக்களவை 3 ஆம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று காலை 7 மணிக்கு தொடங்கிய நிலையில் பிரதமர் நரேந்திர மோடி குஜராத் மாநிலம் அகமதாபாத்திலுள்ள நிஷான் உயர்நிலை பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினைச் செலுத்தினார். முன்னதாக வாக்குச்சாவடிக்கு வருகை தந்த பிரதமரை உள்துறை அமைச்சர் அமித் ஷா வரவேற்றார்.

பிரதமர் மோடி காவி நிற ஜாக்கெட் அணிந்து வந்திருந்தார். வழியில் அவர் மக்களுக்கு கையசைத்து உற்சாகப்படுத்திய வண்ணம் வந்தார். தன்னை ஓவியமாக வரைந்திருந்த ஒரு வருக்கு அந்த ஓவியத்தின் கீழ் தனது கையொப்பத்தை இட்டுக் கொடுத்தார். அத்தோடு, வாக்குச்சாவடிக்கு வெளியே நின்றிருந்த சிறுமி ஒருவருடன் பிரதமர் மோடி படம் எடுத்துக் கொண்டார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாயில் கைதான மன்னா ரமேஷ் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்!

கொழும்பு, மே 08

**பாதாள உலகக் குழுவின் முக்கிய புள்ளிகளில் ஒருவரான "மன்னா ரமேஷ்" என்று அழைக்கப்படும் ரமேஷ் பிரியஜனக டுபாயில் கைது செய்யப்பட்டு நேற்று செவ்வாய்க் கிழமை இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்.**

சர்வதேச பொலிஸாரால் இவருக்கு "சிவப்பு" பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் டுபாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

ரமேஷ்மீது கப்பம் பெறுதல், கொலை, போதைப்பொருள் கடத்தல் மற்றும் சில கொலைகளை செய்வதற்கு இவர் வழிநடத்தியும் உள்ளார் எனப் பல குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

டுபாயில் கைது செய்யப்பட்ட மன்னா ரமேஷ் நேற்று நாட்டுக்கு அழைத்து வரப்பட்டமையை பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ உறுதிப்படுத்தினார். மேலும், அவரை குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார். (ஐ)



# குற்றவியல் நடவடிக்கை முறை சட்டம் சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார்!

கொழும்பு, மே 08

குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை (திருத்த) சட்டமூலத்தை கடந்த 03 ஆம் திகதி சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சான்றுரை படுத்தினார் என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றில் அறிவித்தார்.

நேற்று பாராளுமன்றம் கூடியபோது சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் சபாநாயகரின் அறிவிப்புகளை வெளியிட்டபோது இதனைத் தெரிவித்தார்.

சான்றுரைப்படுத்தப்பட்ட சட்டமூலம் 2024 ஏப்ரல் 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்பட்டது.



இதற்கமைய குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் 2024 ஆம் ஆண்டு 25ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமாக கடந்த 03ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. (ஐ)

# உயிரிழந்த படையினர் நினைவாக ஜனாதிபதிக்கு கொடி அணிவிப்பு



கொழும்பு, மே 08

போரில் உயிரிழந்த படையினரை நினைவுகூரும் மே மாதத்தில் கொடிதினம் ஆரம்பமாகியுள்ளது. முதல் கொடியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அணிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற ஜெனரல் நிஷாந்த மானகேவால் ஜனாதிபதிக்கு கொடி அணிவிக்கப்பட்டது.

நாட்டில் 30 ஆண்டுக்கும் மேலாக நீடித்த போரில் உயிரிழந்த படையினரை நினைவுகூரும் முகமாக மே மாதத்தை "படை வீரர்" மாதம் என்று அரசு பிரகடனப்படுத்தியிருந்தது.

இதனால், மே மாதத்தின் முதல் வாரத்தில் படையினர் நினைவாக கொடி தினம் அனுசரிக்கப்படுகின்றது. முதல் கொடி ஜனாதிபதிக்கு அணிவிக்கப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பச்சை நிற உருளைக்கிழங்கை வாங்குவதை தவிர்க்கவேண்டும்!

கொழும்பு, மே 08

பச்சை நிறமுள்ள உருளைக்கிழங்கில் அதிக நச்சுத்தன்மை உள்ளது. எனவே, மக்கள் அவற்றை வாங்குவதை தவிர்க்க வேண்டும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பொது சுகாதார பரிசோதகர் சந்துன் ரத்நாயக்க தெரிவிக்கையில்,

உருளைக்கிழங்கு முளைப்பதற்கு தயாராக இருப்பதாலோ, மண்ணில் இருப்பதாலோ அல்லது சேமிப்பின்போது சூரிய ஒளி படுவதாலோ ஏற்படும் இரசாயன மாற்றத்தால் உருளைக்கிழங்கு பச்சை நிறமாக மாறுகிறது.

உருளைக்கிழங்கு பச்சை நிறமாக மாறுவதற்கு முக்கிய காரணம், உருளைக்கிழங்கை சேதப்படுத்தும் பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு எதிராக ஆசோலனைன் மற்றும் சாகோனைன் **(solanine and chaconine)** எனப்படும் இயற்கை இரசாயனங்களால் கிளைகோல்கலாய்ட்களின் உற்பத்தி அதிகரிப்பாகும்.

இந்த பச்சை உருளைக்கிழங்கு மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்தது. எனவே, பச்சைநிற உருளைக்கிழங்குகள் வாங்குவதை மக்கள் தவிர்க்க வேண்டும் - என்றார். (ஐ)

# நிதி நிறுவனத்திலிருந்து கஞ்சா பொதிகள் மீட்பு!

கொழும்பு, மே 08

நிதி நிறுவனம் ஒன்றில் இருந்து கஞ்சா பொதிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நுவரெலியா - தலவாக்கலை நகரில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரதேச மக்கள் தலவாக்கலை பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் கஞ்சா பொதிகளுடன் நிறுவனத்தில் வைத்து இருவர் கைது செய்யப்பட்டனர்.

மாதாந்த கொடுப்பனவை செலுத்தாத ஒருவரின் முச்சக்கர வண்டியை கடந்த சனிக்கிழமை தாம் பறிமுதல் செய்தபோது அதில், இந்தப் பொதிகள் இருந்தன என்றும் தமக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று நிறுவனம் தெரிவித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று முன்தினம் நுவரெலியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஐ)

# கை, கால்கள் கட்டப்பட்டு பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, மே 08

கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். அவரின் வீட்டுக்குள் நுழைந்து கொள்ளையில் ஈடுபட்டவர்களே அவரை கொன்றிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை - வெலிகமையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 78 வயது பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

அவரின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் பெண்ணின் கை, கால்களை கட்டி தகவல்களை அறிந்து கொள்ளையிட்ட பின்னர் அவரை கொன்றிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 21 நாட்களாக தண்ணீரின்றி விநாயகபுரம் மக்கள் அவலம்!



நுவரெலியா, மே 08

நுவரெலியா மாநகர சபைக்கு உட்பட்ட லவர்ஸ்லீப் விநாயகபுரம் மக்கள் கடந்த 21 நாட்களாக தண்ணீரின்றி பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று தெரியவருகின்றது.

தண்ணீர் இல்லாததால் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்க தாம் பெரும் அவலத்துக்கு உள்ளாகின்றனர் என்று மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் நுவரெலியா மாநகர சபை ஆணையாளருக்கு முறையிட்டபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இதேநேரம், நுவரெலியாவில் நீடிக்கும் வறட்சியால் விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மோசடியால் முன்னாள் படை சார்ஜன்ட் கொலை

கொழும்பு, மே 08

பணத்தைப் பெற்று மோசடி செய்தார் என்று கூறி முன்னாள் இராணுவ சார்ஜன்ட் ஒருவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை - பெங்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 51 வயது நபரே இவ்வாறு கொல்லப்பட்டார்.

கொலையான நபர், இருவரிடம் பணம் பெற்று மோசடி செய்திருந்தார் என்றும் அவர்கள் இருவருமே இந்தக் கொலையை செய்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## நாட்டின் கையிருப்பு 9.6 வீதத்தால் உயர்வு

கொழும்பு, மே 08

நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு ஏப்ரலில் 9.6 வீதத்தால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, மார்ச்சில் 4.96 பில்லியன் டொலராக இருந்த உத்தியோகபூர்வ கையிருப்பு ஏப்ரலில் 5.43 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

நிதி பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் சீனா வழங்கிய 1.4 பில்லியன் டொலர்களும் இதில் உள்ளடங்குவதாக மத்திய வங்கி தெரிவித்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்...

காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு 2022.03.07 அன்று நடந்த அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி...

பரமன் கிராய் போன்ற கிராம அலுவ லர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதி மக்கள் குடிதண்ணீருக்காக பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவர்களுக்கான குடிநீரை பூநகரி பிரதேச சபை பௌஷர் மூலம் விநியோகித்து வருகிறது. (அ)

## சுகாதார...

சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட தொழிநுட்ப அறிக்கையின் படி, கொடுப்பனவுகளை வழங்குவதாக எழுத்து மூலம் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் அது ஏப்ரல் மாதம் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், இதுவரையில் அந்த வாக்குறுதி உரிய முறையில் நிறைவேற்றப்படாததால் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்ததாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

இதன்படி, நோயாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பை கருத்திற்கொண்டு, நாடு தழுவிய பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு பதிலாக, மாகாண ரீதியாக அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களை கடமையில் இருந்து வெளியேறும் தொழிற்சங்க நடவடிக்கையை எதிர்வரும் 09ஆம் திகதி முதல் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கையை செயல்படுத்தும் மாகாணங்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## மோடியின்...

நிறுவனத்துக்கு வழங்கியுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகச்சந்திப்பில் கருத்து வெளியிட்ட தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த சமரவீர,

"வி.எவ்.எஸ் குளோபல் நிறுவனத்துக்கு விசா வழங்கும் செயல்பாட்டை ஒப்படைத்துள்ளமையை கடுமையாக எதிர்க்கிறோம்.

இவ்வாறு எந்தவொரு உள்ளூர் அல்லது வெளிநாட்டு தனியார் நிறுவனத்திற்கும் விசா வசதிகளை வழங்குவதற்கான அதிகாரத்தை வழங்குவது குடிவரவுச் சட்டத்திற்கு எதிரானது மற்றும் சட்டவிரோத செயலாகும்.

அத்தகைய முடிவை எடுக்க வேண்டுமானால், அரசாங்கம் முதலில் குடிவரவு சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். ஆனால், இந்த நடவடிக்கையை அரசாங்கம் ரகசியமாக எடுத்துள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றுக்கு இந்த நடவடிக்கை முன்னெடுக்க சட்டப்பூர்வ அனுமதியை வழங்கினால் அது இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவது மட்டுமன்றி அது அரச விரோதச் செயலாகும்.

விசா வசதிகளை தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் இலங்கைக்கு வருடாந்தம் 60 மில்லியன் டொலர் வருமானம் இழப்பு ஏற்படும்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து இந்த நிறுவனம் 25 டொலரை சேவைக் கட்டணமாக அறவிடுவது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதுடன், இலங்கையின் கௌரவமும் பாதிப்புக்கு உள்ளாகும்." - என்றார். (அ)

## முன்னாள்...

அவர் தனது முகநூலில் இட்ட பதிவு தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்கு கொழும்பிலுள்ள பயங்கர வாத தடுப்புப் பிரிவுக்கு கடந்த மார்ச் மாத இறுதியில் அழைக்கப்பட்டு பின்னர் கைது செய்யப்பட்டு கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தனது கைது குறித்து பி அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தன்னை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் கோரி நேற்று முந்தினத்திலிருந்து வெலிக்கடை சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் அவர் ஈடுபட்டு வருகின்றார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

## நாடுமுழுவதும்...

சார்பாக காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, காலநிலை இடர் மன்றம் சார்பாக அதன் பொதுச் செயலாளர் முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷிட் மற்றும் போர்த்துக்கலின் Nativa Capital நிறுவனம் சார்பில் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி கார்லோஸ் கோமஸ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

விவசாய விளைச்சல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேம்படுத்தப்பட்ட மற்றும் நிலைபேறான விவசாய முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையிலுள்ள கிராமப்புற சமூகங்களின் வீட்டு விவசாயத்தை மேம்படுத்துவதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள பல விவசாய நிலங்கள் தற்போது சிறிய அளவில் உள்ளன. எனவே, குறைந்த விளைச்சல் மற்றும் குறைந்த வருமானம் ஆகியவற்றால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால் 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 15, 000 விவசாயிகளுக்குத் தேவையான ஒத்துழைப்பையும் தொழில்நுட்ப அறிவையும் வழங்கும் முன்னோடித் திட்டம் அநுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடங்கியுள்ள விவசாயம் மற்றும் காடு வளர்ப்புத் திட்டங்கள், காலநிலை பாதிப்பு மன்றத்தின் ஆதரவுடன் இலங்கையால் வரையப்பட்ட இலங்கையின் காலநிலை தாங்கும் திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நிலையான விவசாயத்தின் மூலம் வலுவான ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்த்தன ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

" நவீன விவசாயத்தை உருவாக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தின் பிரகாரம், விவசாயத்துக்கான நவீன தொழில்நுட்பத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க போர்த்துக்கேய நிறுவனம் ஒன்று முதலீடு செய்ய முன்வந்துள்ளது. இது சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடாகும்

இதற்காக அநுராதபுரம் மாவட்டத்தில் 15,000 குடும்பங்களும் 15,000 ஏக்கரும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த முன்னோடித் திட்டத்தில் 15 குடும்பங்களும் பதினைந்து ஏக்கர்களும் இணைக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு குடும்பத்துக்கு சுமார் 6000 அமெரிக்க டொலர்கள் செலவை முதலீட்டு நிறுவனம் ஏற்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி அடுத்த 25 ஆண்டுகளுக்கு விவசாயத்துக்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்படும். - என்றார்.

## ஐ.தே.க. மீண்டுவிட்டது!

### பாலித ரங்கே பண்டார

கொழும்பு, மே. 08

ஐக்கிய தேசியக் கட்சி எழுந்துவிட்டது, அக்கட்சியின் பலம் என்னவென்பது அடுத்த தேர்தலில் தெரியவரும் என்று ஐதேகவின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளனர். மே தினத்தில் அவர்கள் மேடையேறுவார்கள் என நாம் கூறவில்லை. அடுத்துவரும் நாட்களில்தான் அவர்கள் வருவார்கள். இனிதான் அரசியல் ஆட்டம் சூடுபிடிக்கும்.

விழுந்துவிட்டது எனக் கூறப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி எழுந்துவிட்டது. எமது பலம் என்னவென்பது அடுத்து வரும் நாட்களிலும் ஜனாதிபதி தேர்தலிலும் தெரியவரும். - என்றார். (அ)

## விஜயதாஸவின்...

மாவட்ட நீதிமன்றம் தமக்குப் பிறப்பித்த தடை உத்தரவின் செயல்பாட்டை இடைநிறுத்துமாறு கோரி விஜயதாஸ ராஜபக்ஷ இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

விஜயதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்த மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறு உத்தரவு பிறப்பித்தது. (எ)

## உள்ளக...

கிடையாது. ஆயுதப் போரில் அத்துமீறல்கள் இடம்பெற்றே தீரும். எனினும், பாதிக்கப்பட்டவர்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு பொறுப்புள்ளது.

விசேடமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில், என்ன நடந்தது? யார் இதற்கு பொறுப்பு? அவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா? இல்லையா? இந்த விடயங்களை தெளிவுபடுத்துவதும் அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணத்துக்கான ஆணைக்குழு முன்பாக சாட்சியங்கள் வழங்கப்பட்ட பின்னர், யுத்தத்தின் இறுதி இரண்டு நாட்களில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் அரச படையினரிடம் சரணடைந்தார்கள் என அரசாங்கம் நியமித்த ஆணைக்குழுவே தெரிவித்துள்ளது. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையாவது வெளிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் - என்றும் கூறினார். (ஐ)

## ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே இந்த வருடம்

கொழும்பு, மே. 08

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலைத் தவிர வேறு எந்தத் தேர்தலும் இவ்வருடம் நடைபெறாது என ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்துவதன் மூலம் எதிர்க்கட்சிகள் இந்த தருணத்தில் அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் தவறான கருத்தை நாட்டுக்கு வெளியிடுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பழைய...

மக்களை தெளிவுபடுத்துவதற்காகவே இவ்விடயங்களைக் கூறுவதாகக் குறிப்பிட்ட மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, தற்போதைய பொருளாதார கொள்கையில் மாற்றம் ஏற்பட்டால், மீண்டும் பழைய கடினமான நிலை ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக தெரிவித்தார்.

தற்போது முன்னெடுக்கப்படுகின்ற கொள்கை எதிர்காலத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம் என அவர் வலியுறுத்தினார். (அ)

## பொலிஸ்...

வீசா பிரச்னை குறித்து அண்மையில் விமான நிலையத்தில் கருத்துத் தெரிவித்த சந்தரு குமாரசிங்கவை பொலிஸூக்கு அழைத்து வாக்குமூலம் பெறப்பட்டது. இங்கு நடப்பது பொலிஸ் இராஜ்ஜியமல்ல. இது ஏகாதிபத்திய நாடும் அல்ல. இது ஜனநாயக நாடு. பேச்சுச் சுதந்திரம் அவருக்கு இருப்பதால் அவருக்கு இடையூறு விளைவிக்க முடியாது, அவரைத் தொந்தரவு படுத்த வேண்டாம்.

இந்நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் அவருக்கு பேச்சுச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரம் உள்ளது. இதற்கு இடையூறு ஏற்படுத்த முடியாது.

அவர் அவரது கருத்தை முன்வைத்துள்ளார். அதனால் இந்த விடயத்தை மேலும் கொண்டு செல்வதில் அர்த்தமில்லை என்பதால் இந்த விடயத்தை இநத நிலையில் முடிவுக்கு கொண்டு வருமாறு பிரதமரிடம் கோருகின்றேன். - என்றார். (எ)

## ஒட்டகப்புலத்தில்...

வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், பாதுகாப்புப் பிரிவினரிடம் நேற்றுத் தெரிவித்தார்.

ஒட்டகப்புலம் பகுதிக்கு நேற்று சென்ற ஆளுநர், விடுவிக்கப்பட்ட காணிகளைப் பார்வையிட்டத்துடன், காணி உரிமையாளர்களுடனும் கலந்துரையாடினார். யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி ) ஆகியோ ரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண் டனர்.

வசாவிளான் கிழக்கு( ஜே / 244), வசாவிளான் மேற்கு( ஜே /245), பலாலி வடக்கு(ஜே /254), பலாலி கிழக்கு(ஜே /253), பலாலி தெற்கு(ஜே/252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234. 8 ஏக்கர் காணி அண்மையில் விடுவிக்கப்பட்டது. இங்கு வசித்த 327 குடும்பங்கள் காணி உரிமை.கோரி பதிவு செய்ததுடன், அவர்களில் 171 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி துப்புரவு செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் விடுவிக்கப்பட்டுள்ள காணிகளுக்குள் இலகுவாக பிரவேசிக்கக்கூடிய வகையில் பாதைகளைத் திறக்கவும், வீதிகளைப் பயன்படுத்தவும் அனுமதி தருமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கு அமைய, குறித்த அனுமதிகளைப் பாதுகாப்பு பிரிவினருடன் கலந்துரையாடி ஆளுநர் பெற்றுக் கொடுத்தார்.

இதற்கமைய, பொன்னாலை - பருத்தித்துறை கடற்கரை வீதியில் கண்ணகி அம்மன் கோவில் சந்தியிலிருந்து நாகதம்பிரான் கோவில் வீதி ஊடாக விடுவிக்கப்பட்ட காணிக்குள் பிரவேசிக்க முடியும். அத்துடன் வீரப்பளை வீதியில் பலாலி வீதி நோக்கி 100 மீற்றர் தூரத்துக் குள்ளும், வீரப்பளை சந்தியில் தெற்கு நோக்கி தம்பாளை வீதி (விமான நிலைய வீதி ) ஊடாகவும் விடுவிக்கப்பட்ட காணிக்குள் பிரவேசிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சகல வேட்பாளர்களையும் எதிர்கொள்ள நான் தயார்!

## சவால் விடுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, மே. 08

**"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் என்னை எதிர்த்துப் போட்டியிட்டாலும் அத்தனை வேட்பாளர்களையும் எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தொடர்பில் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் கூறியதாவது:-

நாட்டு மக்கள் என் பக்கம் நிற்கும்போது வேட்பாளர்களைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். சகல வேட்பாளர்களுடனும் பகிரங்க விவாதம் நடத்தவும் நான் தயார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் பெருவாரியான அங்கீகாரம் எனக்குக் கிடைக்கும்.



நான் ஊழல், மோசடிகளைச் செய்யவில்லை. கொலைகளைச் செய்யவில்லை. எப்போதும் மக்களுக்காகவும், நீதிக்காகவுமே குரல் கொடுத்து வருகின்றேன். - என்றார்.



# மருமகனின் தாக்குதலில் வவுனியாவில் மாமன் பலி!

## மருமகனும் நண்பரும் கைது!!

வவுனியா, மே. 08

வவுனியா, மதுரா நகர் பகுதியில் மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமனார் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை ஆசிக்குளம் கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட மதுராநகர் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, மதுராநகர் பகுதியில் அமைந்துள்ள இறந்தவரின் வீட்டில் மாமனார், மருமகன் மற்றும் அவரது நண்பர்கள் இணைந்து மது அருந்தியுள்ளனர்.

இதன்போது மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது.

இக் கைகலப்பின்போது மருமகன் மற்றும் அவரது நண்பர்கள் இணைந்து மண்வெட்டி மற்றும் தலைக்கவசங்களினால் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலினால் பலத்த காயங்களுக்குள்ளான மாமன் அவர்களிடம் இருந்து தப்பி ஓடி அருகில் உள்ள வீட்டின் வாசலில் வீழ்ந்துள்ளார்.

வீழ்ந்து கிடந்த குறித்த நபரை அயலில் உள்ளவர்கள் இணைந்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். எனினும் வைத்தியசாலையில் அனுமதிக்க முன்னரே அவர் மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் மதுராநகர் பகுதியைச் சேர்ந்த 45 வயதுயை கணேசமூர்த்தி (மோகன்) என்பவரே மரணமடைந்தவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற சிதம்பரபுரம் பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டதுடன், குடும்பத் தகராறினாலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை சிதம்பரபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 3000 தாதியர்களை சேவையில் இணைப்பதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, மே. 08

புதிதாக மூவாயிரம் தாதியர்களை சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தாதியர் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சைகள் நிறைவடைந்துள்ளதாகவும் மேன்முறையீட்டு காலத்தின் பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

நாட்டில் 45,000 தாதியர்கள் சேவையில் இருப்பதாகவும் பற்றாக்குறை நிலவும் இவ்வேளையில் தாதியர் வெற்றிடங்களை அவசரமாக நிரப்புமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் உயிரியல் மற்றும் கணிதப் பிரிவில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாகவும் தற்போது சுமார் 3100 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் 3800 பேர் காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கிராம உத்தியோகத்தர்களின் போராட்டம் நேற்றும் நடந்தது

கொழும்பு, மே. 08

நாடளாவிய ரீதியில் சுகவீன விடுமுறையை அறிவித்து, கிராம உத்தியோகத்தர்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்தது.

கொடுப்பனவுகளை அதிகரிக்காமை உள்ளிட்ட பல பிரச்னைகளுக்கு உரிய தீர்வு கோரி, நேற்றும் இன்றும் இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தமது தொழில் பிரச்னைகளுக்கான உரிய தீர்வை வழங்காவிடின் அடுத்த வாரம் முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக கிராம உத்தியோகத்தர்கள் சங்கங்கள் எச்சரித்துள்ளன.

இதேவேளை, கிராம உத்தியோகத்தர்களின் சேவையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வுகள் அவசியம் என அகில இலங்கை சுதந்திர கிராம அதிகாரிகள் சங்கத்தின் பிரதித் தலைவர் பீ.எம்.தீக்ஷன தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையர்களின் ஆயுட்காலம் குறைவு

## ராஜித சேனாரத்ன தகவல்

கொழும்பு, மே. 08

2019ஆம் ஆண்டளவில் எமது நாட்டில் வாழும் ஆண்களில் ஆயுட்காலம் 78ஆகவும் பெண்களின் ஆயுட்காலம் 82 ஆகவும் இருந்தது. ஆனால், தற்போது இந்த தரவுகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நாம் முன்னெடுத்த திட்டங்கள ஊடாக சிறந்த தரவுகள் இருந்தன. ஆனால், தற்போது ஆயுட்காலம் குறைந்துள்ளது.

பெண்களது ஆயுட்காலம் 80ஆகவும் ஆண்களது ஆயுட்காலம் 76ஆகவும் குறைந்துள்ளது. சிசுகள் மற்றும் குழமைந்த பிரசுவித்த தாய்மார்களின் மரணமும் அதிகரித்துள்ளது.

2019ஆம் ஆண்டளவில் நாம் அமெரிக்காவின் நிலையை எட்டியிருந்தோம். அதன் காரணமாகவே உலக சுகாதார ஸ்தாபனமும் சிறந்த சுகாதார சேவைகளை முன்னெடுக்கும் நாடாக இலங்கையை அறிவித்தது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட கொவிட் தொற்று நோய் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அதுகுறித்து அவதானம் செலுத்தி இந்த தரவுகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

துறைசார் அமைச்சர் உரிய தரப்பினர்களை அழைத்து இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்-என்றார்.

இதற்கு பதில் அளித்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, கடந்த அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட "ஆரொ பிளான்ட்" வேலைத்திட்டம் சிறந்ததோர் திட்டமாகும். அதன் ஊடாக பல விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அமெரிக்காவிலும் மக்களின் ஆயுட்காலம் 78ஆக தான் உள்ளது. அந்த அளவில் பேணவேண்டும் என்பதில் நாமும் உறுதியாக இருக்கிறோம்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்று நோய் பரவல் காரணமாக பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன. இதன் காரணமாகவே குறிப்பிடத்தக்களவு சிசுகள் மற்றும் குழந்தை பிரசுவித்த தாய்மார்களின் மரணங்கள் அதிகரித்துள்ளன.

அதனைக் கட்டுப்படுத்த விசேட நிபுணர்கள் மற்றும் துறைசார் அனுபவமிக்கவர்களின் குழுவொன்றை அமைக்கவும் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்."-என்றார். (அ)

# தேர்தலை இலக்காக வைத்து மதுபான உரிமம் வழங்காதீர்!

## சபையில் சஜித் கோரிக்கை

கொழும்பு, மே. 08

தேர்தலை இலக்காக வைத்து மதுபான உரிமங்களை வழங்கும் நடைமுறையை நிறுத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த ஆண்டு இறுதிக்குள் மக்களின் ஆசீர்வாதத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் இது கட்டாயம் நிறுத்தப்படும். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த உரிமங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்படும். இது தொடர்பாக நீதிமன்றங்களை நாடினால், பாராளுமன்ற சட்டத்தின் மூலமாக இந்த உரிமங்களை தடை செய்வோம்.

இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகத்தின், வெலங்கஹவல சந்தியில் மதுபான அனுமதிப்பத்திரத்துடன் கூடிய உணவகம் தொடர்பில் தான் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.

இது குறித்து மீண்டும் கேள்வி எழுப்புவது குறித்து கவலை தெரிவிக்கிறேன். மகா சங்கத்தினரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் மீண்டும் இது மீள திறக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.